705

705

HISTORY OF INDIA

IN TAMIL

FOR FORM I

[Prepared according to the 1940 Syllabus]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAY 1941
MADRAS

By

V. SUBRAMANYAN, B.A., L.T.,

History Assistant, N. S. M. V. P. S. High School, Devakottai.

T. G. GOPAUL PILLAI

TEPPAKULAM :: TRICHINOPOLY

Price As. 6

இந்து தேச சரித்திரம்

(முதல் பாரத்திற்குரியது)

[1940-ல் வெளியிடப்பட்டுள்ள பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டுள்ளது.]

954

ஆசிரியர் :
V. சுப்பிரமணியன், B.A., L.T.,
சரித்திர உதவி உபாத்தியாயர்,
N. S. M. V. P. S. ஹைஸ்கூல், தேவகோட்டை.

T. G. கோபால் பிள்ளை
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி
1940
பதிப்புரிமை]
[விலை அணு 6.

First edition 1940

V444

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAY 1941
MADRAS

முகவுரை

ஒரு நாட்டின் அரசியல், நாகரிகம், வாழ்க்கைமுறை முதலியவற்றை அறிந்துகொள்ளத் தேச சரித்திரம் உதவுகின்றது. தம் நாட்டின் பழஞ்சிறப்புக்களை உணர்வதால் மக்கள் உள்ளத்தில் தேசாபிமானம், வீரம் முதலிய சிறப்பியல்கள் பொங்கி எழுகின்றன. இதனுல் தேச சரித்திரம் சிறுவர்க்கு இன்றியமையாத பாடமாகின்றது. இந்நோக்கத்தையொட்டிச் சென்னை அரசாங்கத்தாரால் 1940-ல் வெளியிடப்பட்டுள்ள பாட திட்டத்தின்படி முதல்பார மாணவர்களுக்கு ஏற்றவாறு **இந்து தேச சரித்திரம்** என்னும் இப்புத்தகம் இயற்றப் பெற்றுள்ளது.

இப்புத்தகம் நூதன போதனுமுறைக் கிரமத்தை அநுசரித்து இனிய எளிய தமிழ் நடையில், படிக்குங்கால் சிறுவர்க்கு ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. பல சித்திரப்படங்களும் தேச சரித்திரப் படங்களும் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டிருப்பதோடு ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கேள்விகள் சில கொடுக்கப்பட்டுள்ளன.

இதைக் கண்ணுறும் கல்வியிலாகா அதிகாரிகளும், கல்வியபிமானிகளும், கல்விச்சாலை ஆசிரியர்களும் இப்புத்தகத்தைத் தங்கள் பள்ளிக்கூடங்களில் பாடபுத்தகமாக வைத்து ஆதரித்து, என்னை இப்பணியில் ஊக்கமுறச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

V. சுப்பிரமணியன்.

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
1.	இந்தியாவின் இயற்கையமைப்பும் அதனுல் ஏற்பட்ட சரித்திர சம்பந்தமான பலன்களும் ...	1
2.	இந்தியாவின் பூர்வீக குடிகள் ...	6
3.	இந்தியாவில் முதலில் குடியேறியவர்கள் ...	10
4.	வேதகாலமும் இதிகாசகாலமும் ...	13
5.	இராமாயணமும் பாரதமும் ...	16
6.	இந்திய சமூக நிலைமை ...	20
7.	புதிய மதங்களின் பிறப்பு ...	22
8.	ஜைனமதமும் மகாவீரரும் ...	23
9.	கௌதம புத்தரும் புத்தமதமும் ...	25
10.	அலெக்ஸாந்தரின் படையெடுப்பு ...	28
11.	மௌரிய வம்சம் ...	31
12.	சந்திரகுப்த மௌரியன் ...	33
13.	அசோகர் ...	36
14.	மௌரியர்களுக்குப்பின் வந்த அரசர்கள் ...	39
15.	கனிஷ்கர் ...	41
16.	குப்தர்கள் காலம் ...	44
17.	சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் ...	47
18.	ஹர்ஷவர்த்தனன் ...	49
19.	ஹர்ஷனின் மேன்மை ...	51

எண்	பொருள்		பக்கம்
20.	இராஜபுத்திரர்களின் எழுச்சி	...	53
21.	தக்காண அரச குடும்பங்கள்	...	55
22.	சாளுக்கியர்கள்	...	56
23.	ராஷ்டிரகூடர்கள்	...	58
24.	கல்யாணிச் சாளுக்கியர்கள்	...	60
25.	பல்லவர்கள்	...	61
26.	தென்னிந்திய இராஜ்யங்கள்	...	64
27.	சோழ ராஜ்யம்	...	65
28.	சேர ராஜ்யம்	...	70
29.	பாண்டிய ராஜ்யம்	...	72
30.	மதாசாரியர்கள்	...	74

1940 Syllabus for History of India

FORM I

Historical Geography of India and its influence upon history.

The Early Inhabitants of India.

The Early Immigrants and the Aryans; the route they followed and why they came to India.

Vedic and Epic Ages. The social condition of India.

The Rise of New Religions—Buddhism and Jainism.

Alexander's invasion.

The Early Kings—Mauryan Dynasty.

Chandragupta Maurya and Asoka, their life and work.

The success of the Mauryas—Kanishka.

The Gupta period—Chandra Gupta I—Samudra Gupta—Vikramaditya and the later Guptas.

Harsha—His greatness.

The Rise of the Rajputs.

The Deccan Royal Houses—The successors of the Andhras.

Chalukyas and Rashtrakutas.

The Pallavas.

The South Indian States—Chera, Chola and Pandya.

The Religious Reformers—The elements of their teaching.


இந்தியா
இயற்கையமைப்பு
ஆப்கானிஸ்தானம்
கைபர் கணவாய்
போலன் கணவாய்
திபெத்
பிரமமபுத்திரா நதி
இமய மலைகள்
சிந்து சமவெளி
தார்
கராச்சி
மத்திய இந்தியப் பீடபூமி
விந்தியமலை
கல்கத்தா
பம்பாய்
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்
சென்னை
புதுச்சேரி
கள்ளிக்கோட்டை
இலங்கை
கொழும்பு
இந்து மகா சமுத்திரம்
மலை
பீடபூமி
சமவெளி
வ
மைல்கள்
0 100 200 300

இந்து தேச சரித்திரம்

(முதல் பாரத்திற்குரியது)

1. இந்தியாவின் இயற்கையமைப்பும் அதனுல் ஏற்பட்ட சரித்திர சம்பந்தமான பலன்களும்

நம் நாட்டின் இயற்கையமைப்பு :—ஆசியா கண்டத்தின் தென்பாகத்தில் மூன்று அழகிய தீபகற்பங்கள் அமைந்துள்ளன. இவைகளின் மத்தியில் காணப்படும் பெரிய தீபகற்பமே, நம் நாடாகிய **இந்தியா**வாகும்.

இத்தேசத்திற்கு இந்தியா என்ற பெயர் நம்மவர்களால் கொடுக்கப்பட்டதல்ல; இது அன்னியரிட்ட பெயர். நம்மவர் இந்தியாவைப் **பரதகண்டம், பாரதவர்ஷம்** என்ற பெயர்களால் அழைத்தனர்.

எல்லைகள் :—வடக்கில் **இமயமலை**த் தொடர்களும், வடமேற்கில் **காரகோரம், ஹாலா, சுலைமான்** முதலிய மலைத்தொடர்களும், வடகிழக்கில் **பாட்காய், நாகா** முதலிய மலைத்தொடர்களும், கிழக்கில் **வங்காள விரிகுடா**வும், தெற்கில் **இந்து மகா சமுத்திரமும்**, மேற்கில் **அரபிக் கடலும்** இந்தியாவின் எல்லைகளாகும். மேற்கூறியவைகளைப் பக்கத்திலுள்ள படத்தில் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

எல்லைகளின் தன்மை :—வடக்கிலிருக்கும் இமயமலை கிழக்கு மேற்கில் சுமார் 1,500 மைல் நீளமும், தெற்கு வடக்

கில் சுமார் 150 முதல் 200 மைல் அகலமும் பரவியிருக்கிறது. இதன் உன்னதமான சிகரங்கள் பலவற்றுள் **எவரஸ்ட் ஒன்று.** அது சுமார் $5\frac{1}{2}$ மைல் உயரமுள்ளது. உலகத்திலுள்ள மலைகள் எல்லாவற்றிலும், இமயமலையே மிக்க உயரமானது. இம்மலை எப்பொழுதும் உறைபனியால் மூடப்பட்டிருப்பதால், இதற்கு இப்பெயர் வந்தது. இமயமலையில் வரிசை வரிசையாய்ப் பல தொடர்களிருக்கின்றன. ஒவ்வொரு வரிசைக்கும் மத்தியில் கரடு முரடானதும், காடுகள் நிறைந்ததும், துஷ்டமிருகங்கள் சஞ்சரிப்பது



கைபர் கணவாய்

மான பிரதேசங்கள் இருக்கின்றன. இவை வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகிய பக்கங்களில் இத்தேசத்திற்கு இயற்கை அரண்களாக இருக்கின்றன. ஆனல் இந்தியாவுக்கு மேற்கேயுள்ள பலுச்சிஸ்தானம், ஆப்கனிஸ்தானம் முதலிய விடங்களுக்குப் போக, வடமேற்கு மலைத்தொடர்களுக்கிடையே பல கணவாய்கள் இயற்கையாய் அமைந்திருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை **போலன், கைபர்** என்ற கணவாய்களாம்.

இவ்வாறே, இந்தியாவுக்கு வடகிழக்கில் உள்ள நாடுகளுக்குச் செல்ல, வடகிழக்கு மலைத்தொடர்களின் இடையே பல கணவாய் மார்க்கங்கள் இருக்கின்றன. மற்றப் பக்கங்களில் கடல்கள் நீர்அரண்களாக அமைந்துள்ளன.

எல்லைகளால் ஏற்பட்டுள்ள பயன்:—இவ்வாறு நமது தேசம் உயர்ந்த மலைத்தொடர்களாலும், காடுகளாலும், கடல்களாலும் சூழப்பட்டிருப்பதால், பண்டைக் காலத்தில் எதிரிகள் நம் தேசத்துக்குள் சுலபமாய்ப் பிரவேசிக்கக்கூடவில்லை. இவ்வித இயற்கையமைப்போடு கடற்காற்று, தரைக்காற்று, சீதோஷ்ணம் முதலியவைகளும் இந்தியாவின் செழிப்புக்குக் காரணமாயிருக்கின்றன. வடமேற்கிலும் வடகிழக்கிலும் கணவாய்களிருப்பதால், பிறநாடுகளுடன் வியாபாரம் செய்ய இடம் ஏற்பட்டது. இந்தியாவின் செழிப்பைக் கண்ட அன்னியர் பலர், இந்தியாவை யடைய ஆசை கொண்டனர்.

இயற்கைப் பிரிவுகள்:—இந்தியாவை மூன்று பெரும் இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, (1) இமய மலைப் பிரதேசம், (2) சிந்து-கங்கைச் சமவெளி, (3) தக்காணமும் மேற்கு கிழக்குக் கடற்கரைகளும் என்பனவாம்.

இமயமலைப் பிரதேசத்தைப்பற்றி முதலிலேயே படித்துவிட்டோம். இனி மற்ற இரண்டு இயற்கைப் பிரிவுகளையும்பற்றிப் படிப்போம்.

சிந்து-கங்கைச் சமவெளி:—இச்சமவெளிக்கு வடக்கில் இமயமலைத் தொடர்கள் அமைந்திருப்பதாக நாம் படித்தோம். இச்சமவெளி கிழக்கு மேற்கில் சுமார் 2,000 மைல் நீளமுள்ளது. இமயமலைத்தொடர்களிலிருந்து உற்பத்தியாகும் **சிந்து, கங்கை, பிரமபுத்திரா** முதலிய நதிகள் இச்சமவெளியில் பாய்ந்து, இதைச் செழிப்பிக்கச் செய்வதால், இச்சம

வெளியைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சி யடைகின்றனர். இப்பிரதேசத்தை **ஹிந்துஸ்தானம்** என்றும் சொல்வதுண்டு.

தக்காணம்:—விந்திய, சாத்பூரா மலைகளுக்குத் தெற்கிலும், மேற்கு நோக்கிப் பாயும் நர்மதை நதிக்குத்தெற்கிலுமுள்ள பீடபூமிப் பாகத்தைத் **தக்காணம்** என்பர். இதனிருபக்கங்களிலும் நீண்ட கடற்கரைச் சமவெளிகளிருக்கின்றன. இப்பிரதேசத்தின் முக்கிய நதிகள் **நர்மதை, தபதி, மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணு, காவிரி, வைகை** முதலியன. இந்நதிகளை யடுத்த பாகங்கள் செழிப்புற்று ஜனநெருக்கமுள்ளவைகளா யிருக்கின்றன.

இயற்கைப் பிரிவுகளால் ஏற்பட்ட சரித்திர சம்பந்தமான பலன்கள்:—இந்தியாவின் இயற்கையமைப்பு, சீதோஷ்ணம் முதலியவைகளைப்பற்றி நாம் படித்தோம். இவற்றினின்றும் நாம் அறிவதென்னவென்று ஆராய்வோம்.

இந்தியா நாலா பக்கங்களிலும் இயற்கைப் பாதுகாப்பையுடைய நாடு. வடக்கில் இயற்கைக் கோட்டைகளான ஆகாயமளாவிய மலைகளும், மற்றைத் திசைகளில் சமுத்திரங்களாகிய இயற்கை அகழிகளும் அன்னியர்கள் நம் நாட்டினுள் சுலபமாய் வரமுடியாமல் தடுப்பனவாம். பண்டைக்காலத்தில் தரை மார்க்கங்களே மிகுதியாய் உபயோகப்பட்டன; கடல்மார்க்கங்கள் அதிக முன்னேற்றமடையவில்லை; புகைக்கலங்களும், ஆகாயவிமானங்களும் உலவ ஆரம்பிக்கவில்லை. ஆதலால், நம் நாடு சிலகாலம் அன்னியர்களுடன் அதிகமாய் உறவாடாதிருந்தது.

ஆயினும், தொன்றுதொட்டு அன்னியர்கள் நம் நாட்டுடன் வியாபாரம் செய்து வந்தமையால், அவர்கள் இந்தியாவின் செழிப்பைக் கண்டு மயங்கி, இங்கு வியாபாரம் செய்யவோ, இங்கிருக்கும் பொருள்களை வாரிச் செல்லவோ, இங்குக் குடியேறவோ நினைக்கலாயினர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 13 MAY 1941 MADRAS

இந்தியாவின் சில பாகங்கள் கரடுமுரடான மலை யடர்ந்த பிரதேசமென்றும், வேறு சில பாகங்கள் காடடர்ந்த நாடென்றும், மற்றும் சில பாகங்கள் ஜீவநதிகள் ஓடும் பிரதேசமென்றும் நீங்கள் முன்னமே படித்தீர்கள். இவ்வாறு வேறு வேறு இயற்கையமைப்பு ஏற்பட்டுள்ளபடியால், ஆங்காங்குள்ள மக்களின் வாழ்க்கைமுறை ஒரே மாதிரியா யில்லாமல், பலவித வேறுபாடுகளை யுடையதாய்க் காணப்படுகிறது. ஆங்காங்குச் சாகுபடியாகும் பொருள்களும் அவ்வாறே யுள்ளன. அதனல் பல இராஜ்யங்கள் ஏற்பட்டன; மன்னர்களும் பலதிறத்தவராயினர்; மக்களின் மதாசாரங்களும் பலவகைப்பட்டுள்ளன. ஆதலால், மக்கள் ஒருவரோடொருவர் ஒற்றுமையின்றி யுள்ளனர். ஆகவே வடக்கிலுள்ள கணவாய்களின் மூலமாக ஆதிமுதல் அடிக்கடி படையெடுப்புகள் ஏற்பட்டு, இந்திய சரித்திரம் பல மாறுபாடுகளை யடைந்துகொண்டே வந்தது.

கி. பி. 15-ம் நூற்றாண்டில் கடல் மார்க்கம் ஏற்படவும், ஐரோப்பியர் பலர் கடல் மார்க்கமாக இந்தியாவிற்கு வந்து குடியேறி இந்நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். கடைசியாய்க் கடற்படையிலும், தரைப்படையிலும், ஊக்கத்திலும், புத்திக்கூர்மையிலும் சிறந்த ஆங்கிலேயர் இந்தியாவைத் தம் நாடாக்கிக் கொண்டனர்.

கேள்விகள்

1. இந்தியாவிற்கு இந்தியர்களால் இடப்பட்ட பழைய பெயர்களென்ன ?
2. இந்தியாவின் எல்லைகள் எவை ? அவற்றின் தன்மைகளை விளக்குக.
3. சிந்து-கங்கைச் சமவெளியில் செல்லும் நதிகள் யாவை?
4. இந்தியாவின் இயற்கையமைப்பினல் ஏற்பட்ட சரித்திர சம்பந்தமான பலன்கள் யாவை ?

2. இந்தியாவின் பூர்வீக குடிகள்

பூர்வீக குடிகள்:—இந்தியாவின் பூர்வீக குடிகள் யாவர் என்பதைப்பற்றி அபிப்பிராயங்கள் பல உள. எதையும் நிச்சயமாய்ச் சொல்ல இடமில்லை. இந்தியாவின் வடபாகம் ஆதியில் கடலுள் மூழ்கியிருந்ததென்றும், பின்னர் அது வெளிப்போந்து இமயமலைப் பிரதேசமும், சிந்து-கங்கைச் சமவெளியும் அடங்கிய பூபாகமாக ஆகியதென்றும் சொல்லப்படுகிறது. இம்மாறுபாடு ஏற்படு முன்னரே **விந்திய, சாத்பூரா** மலைகளுக்குத் தெற்கேயுள்ள நாடு பூபாகமாக இருந்ததென்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இப்பாகம் குன்றுகளும் காடுகளும் நிறைந்த பகுதி. இதில் தான் இந்தியாவின் பூர்வீக குடிகள் வசித்தனரென ஒருவாறு கூறலாம்.

பூர்வீக ஜனங்களின் உருவம்:—இவர்கள் குட்டையாய்த் தடித்த உதடுகளையும், சப்பை மூக்கையும், உரோமமடர்ந்த சரீரத்தையும், கருத்த மேனியையும் உடையவர்களா யிருந்தனர். சுருங்கச் சொல்லின், இவர்கள் விகாரமான தோற்றத்தை யுடையவர்கள்.

கற்கால மனிதர்கள்:—பூர்வீக ஜனங்களைச் சரித்திர நிபுணர்கள் பழைய கற்கால மனிதர் என்றும், புதிய கற்கால மனிதர் என்றும் இருவகையாகப் பிரிப்பர். எவ்வாறெனில் இப்பூர்வீக ஜனங்கள் ஆதியில் எலும்புகளையும், மரக் கொம்புகளையும் ஆயுதமாய்க் கொண்டிருந்தனர். அப்பால் ஒழுங்கற்ற சாதாரணக் கற்களை ஆயுதமாக உபயோகித்தனர். இவர்கள் **பழைய கற்கால மனிதர்கள்** எனப்பட்டனர். அப்பால் நெடுங்காலத்திற்குப் பிறகு இவர்கள் வேலைப்பாடுள்ள கற்களை ஆயுதமாக உபயோகிக்கலாயினர். இவர்கள் **புதிய கற்கால மனிதர்கள்** எனப்பட்டனர். இவ்விருதிறத்தாரும் பொதுவாகக் கற்கால மனிதர்கள் எனக் கூறப்படுவர்.

பழைய கற்கால மனிதர்கள்:—இவர்கள் விலங்குகளை வேட்டையாடிக் கொன்று, பச்சை மாமிசத்தைப் புசித்து



கல் ஆயுதங்கள்

வந்தனர். இவர்கள் மிருகங்களின் தோலை உடுத்திக் கொண்டனர். இவர்கள் வீடுகளில் வசிக்கவில்லை. இவர்களுக்கு நெருப்பின் உபயோகம் தெரியாது.

புதிய கற்கால மனிதர்கள்:—இவர்கள் பழைய கற்கால மனிதர்களைக் காட்டிலும் நாகரிகம் படைத்தவர்கள். கற்களை உருவப்படுத்தி ஆயுதமாக உபயோகித்தனர். இவர்களுக்கு நெருப்பின் உபயோகம் நன்கு தெரியும். இன்னும் இவர்கள் நிலங்களைச் சாகுபடி செய்தும், ஆடுமாடுகளை மேய்த்

தோதவர்கள்

தும், இறைச்சி முதலியவைகளைச் சமைத்து உண்டும், குடிசைகளில் வசித்தும் வந்தனர். இவர்கள் சவங்களை **முதுமக்கள் தாழி** என்ற மட்பாண்டங்களில் வைத்துப் புதைத்தனர்.

தக்ஷிண பீடபூமியின் மலைப் பிரதேசங்களிலுள்ள **கோலர்கள்,** வங்காளத்திலுள்ள **சாந்தலர்கள்,** ஒரிஸ்ஸாப் பிரதேசத்திலுள்ள **காண்டுகள்,** இராஜபுதனத்திலுள்ள **பீலர்கள்,** நீலகிரியிலுள்ள **தோதவர்கள்** முதலியவர்கள் இப் பூர்வீக இந்தியக் குடிகளைச் சேர்ந்தவர்கள்.

சிந்து சமவெளியின் நாகரிகம்:—சிந்து சமவெளியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகத்தில் தேர்ச்சி பெற்ற மனிதர்கள் இருந்திருக்கவேண்டுமென்பது தெரிய வருகிறது. சிந்து மாகாணத்தில் சிந்துநதி தீரத்தில்



சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தரையைத் தோண்டியதில் புதைந்த பட்டணத்தின் சின்னங்கள் வெளிப்பட்டன.

மோகெஞ்சோதாரோ என்றவிடத்திலும், பஞ்சாபிலுள்ள **ஹரப்பா** என்றவிடத்திலும் பூமியின் கீழிருந்து தோண்டியெடுக்கப்பட்ட பழைய சின்னங்கள் பல உள.

அக்காலத்து மக்கள் சுட்ட கற்களைக் கொண்டு கட்டிய நல்ல வீடுகளில் வசித்தனரென்றும், பொன், வெள்ளி முதலியவைகளாலான ஆபரணங்களை அணிந்தனரென்றும், செம்பு, இரும்பு முதலியவைகளைக் கொண்டு ஆக்கிய வேல், வாள் முதலிய ஆயுதங்களை உபயோகித்தன

ரென்றும், தங்கள் ஊர்களில் கழிவு ஜலம் ஓடக் கால்வாய்கள் அமைத்திருந்தனரென்றும், நாகரிகத்தில் உயர்ந்து விளங்கினர் என்றும் தெரிகிறது.

கேள்விகள்

1. பூர்வீக ஜனங்கள் யாவர்?
2. கற்கால மனிதர்கள் யார்?
3. இந்தியாவின் பூர்வீக குடிகள் யாவர்?
4. கோலர்கள் இப்பொழுது எங்கே காணப்படுகின்றனர்?
5. சிந்து சமவெளி நாகரிகத்தைப்பற்றி ஆறு வரிகள் எழுதுக.

---

3. இந்தியாவில் முதலில் குடியேறியவர்கள்

திராவிடர்கள்:—இவர்கள் இந்தியாவின் பூர்வீகக் குடிகளா அல்லது அன்னிய நாடுகளினின்றும் வந்தவர்களா என்பதில் அபிப்பிராய பேதங்கள் இருந்துவருகின்றன. இவ்விஷயத்தைச் சந்தேகமறச் சொல்வதற்கில்லை. இவர்கள் பூர்வீக ஜனங்களைக் காடுகளுக்கும் மலைகளுக்கும் விரட்டிவிட்டு, அவர்களிருந்த இடங்களைக் கைப்பற்றினர் என்பது பலர் கருத்து. ஆதியில் இவர்கள் பேசிவந்த பாஷையே பிற்காலத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் எனப் பல பாஷைகளாக ஆயிற்று. இவர்கள் கருத்த மேனியும், குட்டை யுருவமும் வாய்ந்தவர்கள்; உழைப்பாளிகள்.

நாகரிகம்:—திராவிடர்கள் பல இராஜ்யங்களை ஏற்படுத்தி, அழகிய நகரங்களையும் கோட்டைகளையும் அமைத்தனர். இவர்கள் பல ஏரிகளை வெட்டியும், அணைக்கட்டுகளைக் கட்டியும், கால்வாய்களை வெட்டியும் ஜலவசதிசெய்து

கொண்டு இன்புற்று வாழ்ந்தனர். தரிசு நிலங்களைப் பண் படுத்தி, இவர்கள் வேளாண்மையை விருத்தி செய்தனர். வியாபாரத்தையும் இவர்கள் அபிவிருத்தி செய்தனர். இவர்கள் நல்ல யுத்தப்பயிற்சி யுள்ளவர்கள்.

திராவிடர்கள் மரங்களையும், சர்ப்பங்களையும் வேறு சில தேவதைகளையும் தொழுதனர்; ஆயினும் முருகனையே கடவுளாக வணங்கினார்கள். திராவிடர்களின் சரிதைகளைப் புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய தமிழ் நூல்களில் காணலாம்.

மங்கோலியர்கள்:—இவர்கள் சீனாவின் வட மேற்குப் பாகத்திலிருந்து வந்து நம் நாட்டின் வடகிழக்கு பாகமாகிய வங்காளம், ஒரிஸ்ஸா முதலிய நாடுகளில் குடியேறித் திராவிடர்களுடன் கலந்து ஒன்றுபட்டனர். பிற் காலத்தில் இவர்கள் ஆரியர்களுடனும் கலந்துவிட்டார்கள்.

ஆரியர்கள்:—இவர்களின் பூர்வீக நாடு எது என்பதை நிச்சயம் செய்யக்கூடவில்லை. இவர்கள் முதலில் மத்திய ஆசியாவிலுள்ள மித உஷ்ணப் புல்வெளிகளில் கால் நடைகளை மேய்த்து வந்தனர். இவர்கள் நாகரிகத்தில் சிறந்தவர்கள். இவர்கள் காலத்தில் இரும்பினால் ஆக்கப் பட்ட ஆயுதங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. ஆதலால், இக்காலத்து ஆரியர்களை **இரும்புக் காலத்தவர்** என அழைப்ப துண்டு.

ஆரியர்களில் ஒரு பிரிவினர் வடமேற்கு இந்தியாவை யடைந்து, பிறகு காலக்கிரமத்தில் சிந்து-கங்கைச் சமவெளியில் குடியேறி வசிக்கலாயினர். இப்பகுதியை இக் காரணத்தால் '**ஆரியாவர்த்தம்**' என்பர்.

ஆரியர்கள் வந்த மார்க்கம்:—இவர்களில் சிலர் மத்திய ஆசியாவை விட்டுப் புறப்பட்டு மேற்கு நோக்கிச் சென்று, ஐரோப்பாவை யடைந்தனர். மற்றும் சிலர் கிழக்கு நோக்

கிச் சென்றனர். இவர்களே சின்ன ஆசியா, ஆக்ஸஸ் நதிப் பிரதேசம் முதலியவற்றைக் கைப்பற்றினர். பிறகு இவர்கள் அங்கிருந்து கப்படோஷியா, ஈரான் பீடபூமி, இந்துகுஷ் மலைப்பிரதேசம், பஞ்சாப் தேசம், சிந்து-கங்கைச் சமவெளி முதலிய விடங்களிலும், கடைசியாகத் தென்னிந்தியாவிலும் குடியேறினர்கள்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த காரணங்கள்:- ஆரியர்கள் ஏன் மத்திய ஆசியாவைவிட்டு வெளியேறினர்கள் என்பது நிச்சயமாய்ச் சொல்ல இயலாது. இவர்கள் வெளியேறி இந்தியாவிற்கு வந்ததற்கு, அநேக காரணங்கள் இருந்திருக்கக் கூடும். அவையாவன:

1. இவர்களுக்குப் போதிய உணவு அங்குக் கிடைக்காம லிருந்திருக்கலாம்.

2. இவர்களின் ஜனசங்கியை அங்கு அதிகரித்து நெருக்கடியாகிவிட, விஸ்தாரமும் செழிப்புமுள்ள இடங்களைத் தேடிப் புறப்பட்டிருக்கலாம்.

3. தங்கள் ஆடுமாடுகளை மேய்க்க இன்னும் நல்ல புற்றரைகளைத் தேடியும் வந்திருக்கலாம்.

4. சீதோஷ்ண நிலைமை தகுதியாயுள்ள நல்ல வாச யோக்கியமான இடங்களைத் தேடியும் வந்திருக்கலாம்.

கேள்விகள்

1. திராவிடர்கள் யார்?
2. திராவிடர்களின் நாகரிகத்தைப் பற்றிச் சுருக்கி வரைக.
3. திராவிடர்களின் தெய்வங்கள் யாவை?
4. ஆரியர்கள் எம்மார்க்கமாய் இந்தியாவிற்கு வந்திருக்கக் கூடும்?
5. ஆரியர்கள் எக்காரணங்களினால் இந்தியாவினுள் குடியேறி யிருக்கலாம்?

4. வேதகாலமும் இதிகாசகாலமும்

ஆரியர் நாகரிகம்:— ஆரியர்கள் கால்நடைகளை மேய்த்தும், வேளாண்மை செய்தும் ஜீவித்தனர்; மண்சுவர்களைக் கொண்ட கூரைவீடுகளில் வசித்தனர்; தாதுவர்க்கங்களைக் கொண்டு ஆயுதங்கள், ஆபரணங்கள் முதலியன செய்தனர். இவர்கள் காலத்தில் பண்டமாற்றல் மூலமாய் வியாபாரம் நடந்தது.

உணவு:— ஆரியர்கள் காய், கனி, கிழங்கு, நெய், பால், தயிர், வெண்ணெய் முதலியவைகளையும், மது மாமிசங்களையும் உண்டனர். யாககாலங்களில் சோமலதை என்னும் ஒருவகைக் கொடியின் ரசத்தைக் குடித்தனர்.

ஆரியர் குடும்பம்:— ஆரியரின் ஒவ்வொரு குடும்பத்திலும் தாய், தகப்பன், புத்திரர்கள், பேரன்கள் முதலியோர் ஒரே குடும்பமாக இருந்து குடும்பம் நடத்திவந்தனர். தகப்பனே குடும்பத் தலைவன். அனைவரும் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்தே நடப்பர். அவருக்குப் பின் மூத்தகுமாரன் குடும்பத்திற்குத் தலைமை வகிப்பான். சொத்துக்கள் குடும்பத்தாரால் பொதுவாக அநுபவிக்கப்பட்டன.

யாகங்கள்:— ஆரியர்கள் இந்திரன், வருணன், வாயு, சூரியன், சந்திரன், அக்னி முதலிய தேவதைகளை வணங்கி வந்தார்கள்; இத் தேவதைகளின் பிரீதிக்காக யாகங்களைச் செய்து வந்தார்கள்.

வேதங்கள்:— ஆரியர்கள் தம் தெய்வங்களை மந்திரங்களால் துதித்தார்கள். அந்த மந்திரங்கள் கீதங்களாக அமைந்திருக்கின்றன. அக்கீதங்கள் எல்லாம் ஆரியர்களுக்குரிய **வேதம்** என்னும் நூலில் உள்ளன. அவ்வேதம் **ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம்** என்று நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வேதகாலம்:—இவ்வாறு நான்கு வேதங்களை வகுத்துக்கொண்டு ஆரியர்கள் சிந்து நதி தீரத்தில் வாழ்ந்து வந்த காலத்தை **வேதகாலம்** என்பர்.



ஆரிய இராஜ்யங்கள் :—சிந்துநதிதீரத்தில் குடியேறிய ஆரியர்கள், காலக்கிரமத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கிழக்கு நோக்கிப் பரவி யமுனை, கங்கை நதிகள் பாயும்

செழித்த வண்டல்மண் படிந்த நிலங்களை யடைந்தனர். பிறகு அங்கிருந்த பூர்வீக ஜனங்களுடன் கலந்து கொண்டனர். தாங்கள் கைப்பற்றிய பிரதேசங்களில் குடியேறிப் பல இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவ்வாறு ஏற்படுத்திய ஆதி ஆரிய இராஜ்யங்கள் பதினாறு ஆகும். அவைகளில் மிக முக்கியமானவை ஐந்து. அவைகளாவன :

	இராஜ்யங்கள்	தலைநகரங்கள்
1.	மகதம்	கிரிவ்ரஜம்
2.	கோசலம்	அயோத்தி
3.	வத்ஸம்	கோஸாம்பி
4.	அவந்தி	உஜ்ஜயினி
5.	காந்தாரம்	தட்சசீலம்

இதர இராஜ்யங்கள் குரு, பாஞ்சாலம் முதலிய பதினேரு இராஜ்யங்களாம். ஆரிய அரசர்கள் நீதி நூல்கள் கற்றறிந்த மகான்களைக் கூட்டிச் சபைகளை யமைத்து ஆட்சி புரிந்தனர். கல்வி கற்கத் தட்சசீலம் முதலிய விடங்களில் கீர்த்திபெற்ற பல கலாசாலைகள் அமைக்கப்பட்டன.

இதிகாசகாலம்:—பிறகு வேதத்திற்கு அடுத்தபடியாக உபவேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், தரும சாஸ்திரங்கள் முதலிய கிரந்தங்கள் ஏற்பட்டன. இவற்றிலிருந்து ஆரியர்களின் நாகரிகம், பழக்கவழக்கங்கள் முதலிய விவரங்களை அறியலாம். இவ்வாறு ஆரியர்கள் இந்துஸ்தானத்தின் பல பாகங்களிலும் பரவி, இராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டு வாழ்ந்துவந்த காலமே **இதிகாசகாலம்** எனப்படும்.

ஜாதிப் பிரிவுகள்:—ஆரியர்கள் தங்களைப் **பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்** என நான்கு ஜாதிகளாகப் பிரித்துக் கொண்டனர். பிராமணர்கள் முக்கியமாக வேதம் ஓது

வதையும், யாகங்கள் நடத்துவதையும் தங்கள் தொழிலாகக் கொண்டார்கள். க்ஷத்திரியர்கள் முக்கியமாகப் போர்த் தொழிலேயும், நாட்டின் பாதுகாப்பையும் மேற்கொண்டார்கள். வைசியர்கள் வேளாண்மையும், வியாபாரமும் செய்தார்கள். சூத்திரர்கள் என்போர் மேற்கூறிய மூன்று ஜாதியார்களுக்கும் ஏவல்புரிந்து வந்தார்கள்.

கேள்விகள்

1. ஆரியர்களின் நாகரிகத்தைப் பற்றிச் சுருக்கிக் கூறுக.
2. வேதகாலம் என்பது எது? இதிகாசகாலம் என்பது எது?
3. நான்கு வேதங்களின் பெயர்களைக் கூறுக.

---

5. இராமாயணமும் பாரதமும்

ஆரியர்கள் இந்துஸ்தானத்தில் பரவி இராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டு வாழ்ந்து வந்தார்கள் என்றும், அக்காலத்தில் இதிகாசங்கள் முதலியன ஏற்பட்டன என்றும் முன் பாடத்தில் படித்தீர்கள். அவ்விதிகாசங்களுள் முக்கியமானவை இராமாயணமும், பாரதமும் ஆகும்.

இராமாயணம்:—இந்துஸ்தானத்தில் முற்காலத்தில் ஆரியர்கள் பல இராஜ்யங்களை யுண்டாக்கினர்கள் என்பதும், அவைகளுள் **கோசல இராஜ்யம்** ஒன்று என்பதும் உங்களுக்குத் தெரியும். அதன் பிரதான நகரம் **அயோத்தி.** அதை ஒருகால் **தசரதர்** என்பவர் ஆண்டு வந்தார். தசரதரின் மூத்த குமாரரான **இராமர்** தம் மனைவி **சீதையுடனும்** தம்பி **இலக்குமணனுடனும்** தென்னிந்தியாவை யடைந்து வனவாசம் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் இலங்கை வேந்தனும், அரக்கர் தலைவனுமான **இராவணன்** என்பவன் ரிஷிகளைத் துன்புறுத்தி வந்தான். அவன் ஒரு நாள்



இராமர் வனவாசம்

இராமலக்ஷ்மணர்கள் தம் பர்ணசாலையில் இல்லாத சமயம் பார்த்துத் தனியே இருந்த சீதையைத் தூக்கிக்கொண்டு தன் நாடு சென்றான். இராமர் இதை யறிந்து கடுஞ்சினங் கொண்டு, கிஷ்கிந்தை என்னுமிடத்திலிருந்த வானர வீரர் களின் உதவியினால், இலங்கை சென்று இராவணனைக் கொன்று, தம் மனைவியை மீட்பித்ததோடு, ரிஷிகளின் துன்பங்களையும் அகற்றி, அவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்தார்.

இராமருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் **இராமா யணம்.** இந்நூலை முதல் முதலில் சம்ஸ்கிருத பாஷையில் இயற்றியவர் **வால்மீகி முனிவர்.** இந்நூலினின்றும் அடியிற் கண்ட விஷயங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

1. தாய் தந்தை சொற்படி நடக்கவேண்டும்.
2. பெண்டிர்க்குச் சிறந்த ஆபரணம் கற்பு.
3. உடன் பிறந்தோர் ஒற்றுமையாயிருக்க வேண் டும்.
4. சத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும்.

மகாபாரதம்:—ஆரியர்கள் ஸ்தாபித்த இராஜ்யங்களுள் **குரு** என்பதும் ஒன்றாகும். அதன் தலைநகரம் **அஸ்தினாபுரம்.** இதை ஆண்ட பரதவம்சப் பரம்பரையினர்களாகிய பாண் டவர்களுக்கும் துரியோதனன் முதலியவர்களுக்கும் அர சுரிமையைப் பற்றிக் **குரு க்ஷேத்திரத்தில்** ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. இது மகாபாரதப்போர் எனப்படும். பரதவம் சத்தாரின் சரித்திரம் **மகாபாரதம்** எனப்படும். **ஸ்ரீவேத வியாஸ முனிவரால்** சம்ஸ்கிருத பாஷையில் முதன் முதலாக இந் நூல் எழுதப்பட்டது. முக்கியமாக மகாபாரதத்தினின்றும் நாம் அறியக்கூடியது என்னவெனில், **'தருமமே ஜெயிக்கும்'** என்பதே.



ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு இரதசாரத்தியஞ் செய்தல்

பாரத யுத்தத்தின் தொடக்கத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு **'ஒவ்வொருவரும் பயனை எதிர்பாராது தம் கடைமையைச் செய்யவேண்டும்'** என்று போதித்த உயர்ந்த தத்துவம் **பகவத்கீதை** என்னும் நூலில் அடங்கியுள்ளது. இந்துமதத்திற்கு இந்நூல் முக்கியமானதாகும்.

கேள்விகள்

1. இதிகாசங்களில் முக்கியமான இரண்டைக் கூறுக. அவைகளை இயற்றியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. இராமாயணத்தினின்றும் நீங்கள் அறியக்கூடிய விஷயங்களை எழுதுக.
3. மகாபாரதத்தினின்றும் நாம் அறியும் நீதி என்ன?
4. பகவத்கீதையின் தத்துவமென்ன ?

6. இந்திய சமூக நிலைமை

ஆரியர்கள் இந்துஸ்தானத்தில் பல இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டும், ஜாதி முறைப்படி அவரவர்களுக்கு ஏற்பட்ட தொழில்களைப் பரம்பரையாகச் செய்து கொண்டும் நாகரிகமாக வாழ்ந்து வந்தார்கள். நாளடைவில் இவர்கள் திராவிடர்களுடன் உறவு கொண்டார்கள். இந்தியாவில் திராவிட நாகரிகமும் ஆரிய நாகரிகமும் கலந்துவிட்டன.

கிராமங்களும் பட்டணங்களும் ஏற்படுத்தப்பட்டன. ஜனங்களிற் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசித்தார்கள். அவர்கள் விவசாயத்தையே முக்கியத் தொழிலாக மேற்கொண்டார்கள். வாய்க்கால்கள் முதலிய நீர்ப்பாசன வசதிகளையும், சாலைகள் முதலிய போக்குவரவு சாதனங்களையும், சத்திரம், சாவடி முதலிய பொது இடங்களையும்

ஏற்படுத்தினர்கள். வேளாண்மைக்குத் தச்சர், கொல்லர் முதலிய தொழிலாளிகளும் ஏற்பட்டார்கள். தொழிலாளிகளும், மற்றவர்களும் தத்தம் இனத்தார்களோடு தனித்தனி வீதிகளில் வசித்தார்கள். கைத்தொழில்கள் விருத்தியாகிப் பலவிதத் தட்டுமுட்டுச் சாமான்களும் ஆயுதங்களும் செய்யக் கற்றுக்கொண்டார்கள்.

வர்த்தகம் சிறப்பாக நடைபெற்றது. வர்த்தகர்களுக்குச் சுங்கவரி முதலியன விதிக்கப்பட்டிருந்தன. வர்த்தகர்கள் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்து, பல இடங்களுக்கும் சென்று வியாபாரம் செய்தார்கள். செப்பு நாணயங்களும், பொன் நாணயங்களும் வழங்கப்பட்டன. என்றாலும் பண்டமாற்று முறையிலேயே பெரும்பாலும் வியாபாரம் நடைபெற்றது. இந்தியர்கள் வெளிநாட்டினர்களுடன் கப்பல் வியாபாரமும் செய்து வந்தனர்.

போர் முறைகளிலும் இவர்கள் தேர்ச்சி பெற்றார்கள். வில், அம்பு, வாள், ஈட்டி முதலிய பல்வேறு ஆயுதங்களும், இரதம், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைச் சேனைகளும் யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டன.

கல்வித்துறையும் விருத்தியாகி வந்தது. தரும சாஸ்திரம், வான சாஸ்திரம், கணித சாஸ்திரம் முதலியன இயற்றினர்கள். விக்ரக ஆராதனை சிறந்ததாக மதிக்கப்பட்டுக் கோவில்கள் கட்டப்பட்டன. அவைகளில் உற்சவங்களும் கொண்டாடப்பட்டன. பிராமணர்கள் ஆதிக்கம் அதிகமாக இருந்தது; அவர்களை அரசர்களும் கண்ணியப்படுத்தினர்கள்.

இவ்வாறு இந்தியர் சமூக வாழ்க்கை, திராவிட நாகரிகமும் ஆரிய நாகரிகமும் கலந்து சிறப்பான வகையில் நடைபெற்று வந்தது.

கேள்விகள்

1. ஆரியரின் நாகரிகம் எவ்வாறு மாறியது?
2. எந்தெந்த வகையில் இந்தியர்கள் முன்னேற்ற மடைந்தார்கள்?
3. எந்த ஜாதியினரின் ஆதிக்கம் அதிகமாயிருந்தது?
4. வியாபாரம் எவ்வாறு நடைபெற்றது? போர் முறை எவ்வாறு இருந்தது?

---

7. புதிய மதங்களின் பிறப்பு

மேற்குறித்தவாறு நன்கு நடைபெற்ற சமூக வாழ்க்கை நலங்குன்றி நாளடைவில் ஜனங்களுக்குள் பல வேற்றுமைகள் தோன்றின. நால்வகைச் சாதியினருள் உயர்வு தாழ்வு என்ற கொள்கைகள் பிறந்துவிட்டன. ஆகையால் ஒற்றுமை குறைந்து பொறாமை, சுயநலம் முதலியன ஏற்பட்டன. யாகங்களும் பலியும் பெருகின. பூஜைச் சடங்குகளில் பக்தி குறைந்து சுயநலப் பாண்மை உண்டாயிற்று.

இம்முறைகளைப் பலர் வெறுத்தார்கள். யாகமும், பலியும் தவருனசெய்கைகளென்று பலர் எண்ணினர்கள். மக்களுள் உயர்வு தாழ்வு என்ற எண்ணம் ஒழிந்து சமநிலை ஏற்படவேண்டுமென்று கருதினர்கள். ஜீவ காருண்யமும், நல்லொழுக்கமும் கைக்கொள்ளுவதே முக்திக்கு வழி என்று எண்ணினர்கள். ஆகவே ஆரியர்களின் மதக்கொள்கைகளில் வெறுப்பும், வேறு புதிய மதங்களை ஆராய்வதில் அவாவும் ஏற்பட்டன. **கௌதம புத்தர், மகாவீரர்** என்னும் இரு பெரியாரும் அவ்வாறு முன் வந்தவர்கள் ஆவர். இவர்களைப் பற்றியும், இவர்கள் ஏற்படுத்திய மதங்களைப்பற்றியும் அடுத்த பாடங்களில் படிப்பீர்கள்.

கேள்விகள்

1. ஜனங்களுக்குள் ஒற்றுமை குறைந்து அபிப்பிராய வித்தியாசங்கள் ஏற்படக் காரணம் என்ன ?
2. ஆரியமதக் கொள்கைகளை ஏன் பலர் வெறுத்தார்கள் ?
3. முக்திக்குக் காரணமாகச் சிலர் கொண்டிருந்த கொள்கை என்ன ?

---

8. ஜைனமதமும் மகாவீரரும்

மகாவீரரின் சரிதை:—இப்பெரியாரின் பெயர் வர்த்தமானர். இவருக்கு ஜினர், ஞாதிபுத்திரர் என்ற வேறு பெயர்களுமுண்டு. இவர் விதேக இராஜ்யத்தில் **குண்டக்** என்னும் கிராமத்தில் கி. மு. ஆரும் நூற்ருண்டின் ஆரம்பத்தில் அவதரித்தார். இவரது தகப்பனர் வைசாலி நாட்டின் ஒரு சிற்றரசர் ஆவர். இவரின் பெற்ருேர் இறந்தபின்னர், இவர் இல்லறத்தில் வெறுப்படைந்து துறவறம் பூண்டார். முதலில் பார்சுவநாதரால் ஏற்படுத்தப்பட்ட மதத்தின்படி நடந்தார். அம்மதம் பிரபுக்களுக்கு மட்டுமென்றிருந்ததால், எல்லோரும் சமம் என்று நினைத்த மகாவீரர் பன்னிரண்டு ஆண்டுகள் சிந்தனை செய்தார். கடைசியாக இவருக்கு ஞானம் உதித்தது. அப்பொழுது இவருக்கு வயது சுமார் நாற்பது.

தாம் அறிந்த உண்மையை இவர் உயிருடனிருந்தவரை மகத, விதேக, அங்க நாடுகளில் பிரசாரம் செய்தார். இம்மத போதனைக்கு மேற்கூறிய நாடுகளின் அரசர்கள் உதவியாயிருந்தனர். சுமார் எழுபதாவது வயதில் பாட்னவிற் கருகில் **பாவா** என்னும் கிராமத்தில் மகாவீரர் முக்தியடைந்தார். மகாவீரருக்கு ஜினர் என்ற பெயருமிருந்ததால், இவரால் ஏற்படுத்தப்பட்ட மதத்திற்கு **ஜைனமதம்** என்ற பெயர் வழங்கலாயிற்று.

ஜைனமதக் கொள்கைகள்:

1. ஜீவகாருண்யத்தையும் அஹிம்சையையும் மேற்கொள்ளவேண்டும். எந்த உயிருக்கும் தீங்கு இழைக்கக் கூடாது.
2. பரிசுத்தமான மனமும், நல்லொழுக்கமுமே மனிதனுக்கு முக்கியமாக அமைய வேண்டுவனவாம்.
3. சரீரத்தின் மேலுள்ள பற்றை நீக்கி விரதங்களை மேற்கொள்ளவேண்டும்.

மேற்கூறிய கொள்கைகளை அனுஷ்டிப்பவர்கள் உலகத் துன்பத்தை நீக்கி, முக்தியடைவர் என்பது ஜைனர்களின் நம்பிக்கை.

கி. பி. முதலிரண்டு நூற்றுண்டுகளில் ஜைன மதம் தென்னிந்தியாவில் பிரபலமாகப் பரவிப் பல நூற்றுண்டுகள் நிலேத்திருந்தது. அக்காலத்துப் பாண்டிய அரசர் ஒருவர் அம்மதத்தைத் தழுவினரென்றும், திருஞானசம்பந்தர் அம்மன்னரைச் சைவமதத்தினராக்கினரென்றும் தமிழ்நூல்கள் கூறுகின்றன. இதைப்பற்றி நீங்கள் பாண்டிய இராஜ்யத்தைப் படிக்கும்போது தெரிந்து கொள்வீர்கள்.

தற்காலநிலை:—இப்பொழுது இம்மதத்தினர் இந்தியாவில் சிலவிடங்களில் மட்டும் காணப்படுகின்றனர். தஞ்சை ஜில்லாவிலும், மத்திய இந்தியாவிலும் ஜைனர் சிலர் உள்ளனர். இவர்களின் முக்கிய கோயில் இராஜபுதனத்திலுள்ள ஆபு மலைச் சிகரத்திலுள்ளது.

கேள்விகள்

1. ஜைனமதத்தை ஸ்தாபித்தவர் யார்?
2. மகாவீரரின் பிறப்பு, வளர்ச்சி முதலியவற்றைப்பற்றிக் குறிப்பு எழுதுக.

3. எந்நாடுகளில் ஜைனமதம் முதலில் பரவியது?
4. ஜைனமதத்தின் தற்காலநிலை யாது ?
5. ஜைனமதத்தின் முக்கிய கொள்கைகளைக் கூறுக.

---

9. கௌதமபுத்தரும் புத்தமதமும்

புத்தர் பிறப்பு:—இந்தியாவில் நேபாள இராஜ்யத்தில் **கபிலவாஸ்து** என்றவிடத்தில் கி. மு. 600 வருடங்களுக்கு முன் சாக்கிய வமிசத்தைச் சேர்ந்த **சுத்தோதனர்** என்ற ஓர் அரசர் ஆண்டுவந்தார். அவர் மனைவியின் பெயர் **மாயாதேவி.** இவர்களுக்குப் பிறந்த புத்திரரே **கௌதம புத்தர்** எனப் பிரசித்திபெற்றவர் ஆவார். இவருக்குப் பெற்றோரால் இடப்பட்ட பெயர் **சித்தார்த்தர்** என்பது. இவர் எல்லாக் கலைகளையும் கற்று எல்லோருடைய மனத்தையும் கவர்ந்தார். ஆனால் இவர் தமது சுகத்தை விரும்பவில்லை. இவரைச் சந்தோஷமாய் வாழச்செய்ய விரும்பி, இவரது பெற்றோர்கள் இவருக்கு **யசோதரா** என்றவோர் இராஜகுமாரியை விவாகம் செய்து வைத்து, நல் வாழ்க்கைக்குரிய சகல சௌகரியங்களையும் அமைத்து வைத்தனர். இவ்வாறே சித்தார்த்தரும் தம் மனைவியுடன் சில காலம் சுகமாக வாழ்ந்துவந்தார். இவருக்கு **ராகுலன்** என்ற ஓர் ஆண்மகவும் பிறந்தது.

சித்தார்த்தர் ஞானம் பெறுதல்:—உலகம் பிணி, மூப்பு, சாக்காடு, வறுமை முதலிய துன்பங்கள் நிறைந்தது என்பதை எண்ணி யெண்ணி சித்தார்த்தர் மனம் நொந்தார்; தம்வாழ்க்கையை வெறுத்தார்; துன்பங்களை யகற்றி முக்தியளிக்கக் கூடிய உண்மையான மார்க்கத்தைக் காண வேண்டுமெனத் தீர்மானித்தார். திடீரென ஒரு நாள் நள்ளிரவில் தனது அரண்மனையில், மனைவி குழந்தை எல்லாரையும் விட்டுவிட்டு ஒருவருங் காணாது வெளிச்

சென்று, காட்டையடைந்து துறவறம் பூண்டு தவம் செய்தார். சில வருடங்களுக்குப் பின், **உருவேலாவனத்தை** அடைந்தார். அப்பால் **கயா** நகருக்குச்சென்று அங்கு ஒரு மரத்தடியிலமர்ந்து சிந்தனை செய்தார். ஒருநாள் மின்னல்

புத்தர்

தோன்றியதுபோல் பேரறிவு இவருக்குண்டாயது. கயாவில் ஞானம் வரப்பெற்றது முதல் இவருக்குப் **புத்தர்** எனவும், எந்த மரத்தடியில் அமர்ந்திருந்தாரோ அம்மரத்திற்கு **மகாபோதி மரம்** எனவும் பெயர்கள் வழங்கலாயின.

புத்தமதம் பரவுதல்:—இவர் சுமார் 45 ஆண்டுகள் வரை பல நாடுகளுக்கும்சென்று, புத்தமதத்தைப் போதித்தார்.

இவரால் ஏற்படுத்தப்பட்ட மதமே **புத்தமதம்** எனப்படும். இவரது கொள்கைகளைப் பரவச் செய்யவும், புத்தமதத் துறவிகள் வசிக்கவும் பிற்காலத்தில் பல மடங்கள் கட்டப் பட்டன. இவைகள் **புத்த விஹாரங்கள்** எனப்படும்.

புத்தர் தமது எண்பதாவது வயதில் குசி என்னும் நகரத்தில் முக்தியடைந்தார்.

இவரது கொள்கைகளைப் பின்பற்றி நடப்பவர் கள் புத்தமதத்தினர் எனப்படுவார்கள். இவர்கள் தற் காலத்தில் இந்தியாவில் அதிகம் இல்லை. ஆனால் சீனு, திபெத், ஜப்பான், சயாம், பர்மா, இலங்கைத் தீவு இவை களில் இவர்கள் அதிகமாக உள்ளனர்.

புத்தமதக் கொள்கைகள் :

1. உலகப்பற்றை யகற்றுதல் வேண்டும்.
2. தூய மனம், தூய வாக்கு, தூய செய்கை இவை களைக் கைக்கொள்ளுதல் வேண்டும்.
3. எவ்வுயிர்களுக்கும் தீங்கு செய்யலாகாது.
4. பிறரிடம் நேசம் பாராட்டவேண்டும்.
5. பெரியோர் சொல்லை மதித்து நடத்தல் வேண்டும்.

மேற்கூறிய கொள்கைகளை அனுஷ்டிப்பவர்கள் பிறப் பும் இறப்பும் ஒழிந்து, பந்தம் நீங்கி இன்ப நிலையாகிய முக் தியை அடைவர் என்பது புத்தமதத்தினர்கள் நம்பிக்கை.

கேள்விகள்

1. புத்தமதத்தை ஸ்தாபித்தவர் யார்?
2. புத்தமதத்தின் கொள்கைகளில் இரண்டைக் கூறுக.
3. விஹாரங்கள் என்பவை எவை? அவை எதற்காக ஏற் படுத்தப்பட்டன?
4. தற்காலம் எந்த நாடுகளில் புத்தமதம் முக்கியமாயிருந்து வருகிறது?

10. அலெக்ஸாந்தரின் படையெடுப்பு

அலெக்ஸாந்தர்:—இம் மகாவீரர் ஐரோப்பாவில் கிரீஸ் நாட்டின் ஒரு பிரிவாகிய மாஸிடோனியா என்னும் நாட்டில் **பிலிப்** என்ற ஓர் அரசரின் புதல்வராய்த் தோன்றினர். பிலிப் இறந்தபின், **அலெக்ஸாந்தர்** தம் இருபதாம் வயதில் சிங்காதனமேறினர். உடனே கிரேக்க நாடு முழுவதையும் தம்வசப்படுத்தினர். கிரேக்கர்களுக்குத் தெரிந்த அக்கால உலக முழுவதையும் வென்று, உலகச் சக்கரவர்த்தியாக ஆகவேண்டுமென்பது அலெக்ஸாந்தரின் பேரவா.

அலெக்ஸாந்தர்

அலெக்ஸாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்தல்:—அக்காலத்தில் பாரசீக இராஜ்யம் கிழக்கே சிந்து நதி வரை பரவிக் கீர்த்தி பெற்றிருந்தது. பாரசீக மன்னரான மூன்ருவது **டரயஸ்** வலிமை குன்றியவராயிருந்தார்.

இந்தியா செல்வமுள்ள நாடென்று அலெக்ஸாந்தர் அறிந்தார். மற்றும் வடமேற்கு இந்தியாவில் உள்ள இராஜ்யங்கள் நிலை குலைந்திருந்தமையால், அலெக்ஸாந்தர் உலகச் சக்கரவர்த்தியாக ஆகவேண்டுமென்ற தம்மெண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தீர்மானித்து, உடனே அதற்கான முயற்சிகளைச் செய்யலானர்.

அலெக்ஸாந்தர் படையெடுப்பு:—அலெக்ஸாந்தர் கி. மு. 330-க்குள் பாரசீகம், சின்ன ஆசியா, எகிப்து முதலிய

நாடுகளை ஜெயித்துவிட்டார். கி. மு. 327-ல் காபூல் நாட்டையும் ஜெயித்தார். ஜயித்த நாடுகளைப் பரிபாலிக்க நல்ல உத்தியோகஸ்தர்களை நியமித்தார். பிறகு கி. மு. 326-ல் படகுகளைக்கொண்டு பாலம் கட்டிச் சிந்து நதியைக் கடந்து பஞ்சாப்புக்குள் நுழைந்து, அதன் மேற்குப் பாகத்திலுள்ள **தக்ஷசீலம்** என்னும் நகரத்தை அலெக்ஸாந்தர் அடைந்தார். அங்கே வேதம், வேதாங்கம் முதலிய எல்லாவற்றையும் நன்ருய்ப் போதிக்கக்கூடிய சர்வகலாசாலை ஒன்று இருந்தது. அந்நகரத்தை **அம்பி** என்ற சிற்றரசர் ஆண்டுவந்தார். இவர், அலெக்ஸாந்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு வேண்டிய உபசரணை செய்தார். பிறகு அலெக்ஸாந்தர் ஜீலம் நதிக்கும், சீனுப் நதிக்கும் இடையிலுள்ள நாட்டின் அரசரான **போரஸ்** அல்லது **புருஷோத்தமர்** என்பவரை ஜெயிக்க எண்ணி, ஜீலம் நதிக்கரையை யடைந்தார்.

அலெக்ஸாந்தரும் புருஷோத்தமரும்:—கி. மு. 326-ல் அலெக்ஸாந்தர் குதிரைப் படையுடன் ஜீலம் நதியின் கரையோரமாகச் சிறிது தூரம் தெற்கே சென்று, அதைத் தாண்டிப் புருஷோத்தமரைத் தாக்கினர். இதையே ஜீலம்நதிச் சண்டையென்பர். இங்கே பயங்கரமான யுத்தம் நடந்தது. கடைசியில் மிக்க சிரமத்தின்பேரில் அலெக்ஸாந்தர் வெற்றி பெற்ருர். புருஷோத்தமர் போரில் ஆண்மையுடன் சண்டை செய்ததாலும், தம்மை அரசராய் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாலும் அலெக்ஸாந்தர் அவரை மெச்சி, அவரது நாட்டை அவரிடமே ஒப்புவித்தார்.

அலெக்ஸாந்தரின் மரணம்:—பிறகு சீனுப், ரவி நதிகளைத் தாண்டிப் பல அரசர்களையும் வென்று, பீயாஸ் நதிக் கரையை அடைந்தார். அப்போது அவரது சைன்யம் மிக்க தளர்ச்சியடைந்திருந்ததால், அவர் தம் நாடு திரும்பினர். வழியில் **பாபிலோன்** நகரில் கி. மு. 323-ல் சுரம் கண்டு இறந்தார். அப்பொழுது அவருக்கு வயது 33. உலகத்

தில் கீர்த்தி பெற்ற வீரர்களுள் அலெக்ஸாந்தரும் ஒருவ ராவர். அவர் சந்ததியின்றி இறந்ததால், அவர் ஜெயித்த நாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரேக்க தளகர்த்தர் வசப்பட்டன.

அலெக்ஸாந்தர் படையெடுப்பால் விளைந்த பலன்கள்:

1. இந்தியாவுக்கும் மேல்நாடுகளுக்கும் கடல்மார்க்க மும் நிலமார்க்கமும் கண்டுபிடிக்கப்பட்டன.
2. இந்தியா, கீரீஸ் ஆகிய நாடுகளின் வியாபாரமும் அபிவிருத்தியாயிற்று.
3. இந்தியர்களின் யோகசாஸ்திர முறைகளைக் கிரேக்கர்கள் கண்டறியலானார்கள்.
4. புத்தமதம் கிரேக்க சம்பந்தத்தால் சில மாறு பாடுகளை யடைந்தது.

கேள்விகள்

1. அலெக்ஸாந்தர் யார்?
2. அலெக்ஸாந்தரின் முக்கிய நோக்கம் என்ன?
3. ஜீலம்நதிச் சண்டை யார் யாருக்கு நிகழ்ந்தது?
4. கிரேக்கப் படையெழுச்சியால், நிகழ்ந்த பயன்களுள் இரண்டு கூறுக.

11. மௌரிய வம்சம்

இந்துஸ்தானத்தில் ஆரியர்கள் அநேக ராஜ்யங்களை ஏற்படுத்திய விஷயம் முன்பே கூறப்பட்டது. அவற்றுள் ஒன்றாகிய **மகத ராஜ்யம்** என்பது புத்தருடைய காலத்தில் சிறப்பாக விளங்கிற்று.

சிசுநாக வம்சம் :—அக்காலத்தில் சிசுநாக வம்சத்தார் என்பவர்கள் மகத ராஜ்யத்தைப் பரம்பரையாக ஆண்டு வந்தார்கள். அவ்வரசர்களுள் **பிம்பசாரன், அஜாதசத்ரு** என்பவர்கள் கீர்த்தி பெற்றவர்கள்.

பிம்பசாரன் (கி. மு, 582 முதல் கி. மு. 554 வரை) :— இவன் **இராஜக்கிரகம்** என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்டிருந்தான். இவன் அங்கநாட்டையும் ஜெயித்தான். இவன் கோசலநாட்டு இராஜகுமாரியை மணந்து அவள் ஸ்ரீதனமாய்ப் பெற்ற காசியைத் தான் பெற்றான். இவன் புத்தமதத்தைத் தழுவிப் புத்தபிட்சுக்களுக்கு விஹாரங்கள் கட்டினான். இவன் ஜைனமதத்தையும் ஆதரித்ததாகத் தெரிகிறது. இவன் காலத்தில் புத்தர் இவன் நாட்டிற்குச் சென்று மதபோதனை செய்தார்.

அஜாதசத்ரு (கி. மு. 554 முதல் கி. மு. 527 வரை) :— இவன் பிம்பசாரனின் புதல்வன். **பாடலீபுத்திரம்** என்ற நகரை அழகாய் அமைத்து, அதைத் தன் தலைநகராக்கினான்.

நந்தவம்சம் :—சிசுநாக வம்சத்தாருக்குப் பிறகு **நந்த வம்சத்**தார் என்பவர்கள் மகதராஜ்யத்தை ஆளத்தொடங்கினார்கள். நந்தவமிசத்து முதல் அரசன் **மகாபத்மநந்தன்** என்பவன். இவ்வம்சத்தார் சுமார் 90 வருஷங்கள் (கி.மு. 422 முதல் கி. மு. 332 வரை) மகதநாட்டை ஆண்டார்கள். இவ்வம்சத்தின் கடைசி யரசனையும், அவனது ஒன்பது

குமாரர்களாகிய நவநந்தர்கள் என்பவர்களையும் **சந்திர குப்த மௌரியன்** கி. மு. 332-ல் வென்று, நந்தவம்சத்தை யொழித்து, மௌரிய வம்சத்தை ஸ்தாபித்தான்.

மௌரியவம்சம்:—நந்தவம்ச அரசர்களைப்பற்றி நீங்கள் சிறிது அறிந்தீர்கள். அந்த வம்ச அரசர்களில் கடைசி அரசனுக்கும் தாழ்ந்தகுல ஸ்திரீயான **முரா** என்பவளுக்கும் **சந்திரகுப்தன்** என்ற புதல்வன் பிறந்தான். இவன் நவநந்த அரசர்களுடைய சேனையில் ஒரு தளகர்த்தனாக இருந்தான். இவன் நல்ல சாமர்த்தியமும் குணங்களும் பெற்றவன். அதனால் ஜனங்கள் இவனை மிகவும் விரும்பினார்கள். இவனுடைய செல்வாக்கைக்கண்டு நவநந்த அரசர்கள் இவனைப் பகைத்து, மகத ராஜ்யத்தினின்றும் துரத்திவிட்டார்கள். பிறகு சந்திரகுப்தன் பஞ்சாபிற்குச் சென்று அங்கே வசித்துவந்தான்; நவநந்த அரசர்களை அழித்துத் தாம் எவ்வாறேனும் மகதராஜ்யத்திற்கு அரசனாகவேண்டுமென்று சிந்தனை செய்துகொண்டே இருந்தான்.

இப்படியிருக்க, நவநந்த அரசர்களுக்குச் **சாணக்கியர்** என்னும் வேறொரு விரோதியும் உண்டு. அவர் ஓர் அந்தணர்; இராஜ தந்திரங்களில் தேர்ந்தவர். அவர் நவநந்த அரசர்களை ஒழித்துவிட வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்தார்.

சந்திரகுப்தன் சாணக்கியரை அடைந்து, அவரை நட்புக்கொண்டான். பிறகு சில நாட்களில் சாணக்கியரின் சூழ்ச்சியால் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு, மகத நாட்டின்மீது படையெடுத்தான். நவநந்த அரசர்களுக்கும் சந்திரகுப்தனுக்கும்கடும்போர் நடந்தது. சந்திரகுப்தன் வெற்றியடைந்து, மகதராஜ்யத்திற்கு மன்னனானான்.

சந்திரகுப்தனுடைய தாயின் பெயர் முரா என்பது. ஆகையால் இவனுக்கு **சந்திரகுப்த மௌரியன்** என்ற பெயரும்,

இவன் ஸ்தாபித்த வம்சத்திற்கு **மௌரிய வம்சம்** என்ற பெயரும் வழங்கலாயின.

கேள்விகள்

1. சிசுநாக வம்சத்தின் முக்கிய அரசர்கள் யாவர் ?
2. பாடலீபுத்திரம் யார் காலத்தில் தலைநகராக ஆக்கப் பட்டது ?
3. நந்தவம்சத்தை ஸ்தாபித்தவன் யார் ?
4. மௌரிய ராஜ்யம் யாரால் எப்படி ஸ்தாபிக்கப் பட்டது ?

---

12. சந்திரகுப்த மௌரியன்

சந்திரகுப்த மௌரியன் எவ்வாறு மௌரிய ராஜ்யத்தின் அடிப்படையை ஏற்படுத்தினன் என்பதை முன் பாடத்தில் படித்தீர்கள்.

சந்திரகுப்தனுக்கு உதவிசெய்த சாணக்கியருக்கு **கௌடில்யர்** என்றும் ஒருபெயர் உண்டு. இவர் **அர்த்தசாஸ்திரம்** என்ற இராஜாங்கமுறை நூலும், **சாணக்கிய நீதி** என்ற நீதி நூலும் எழுதியுள்ளார். இவர் அரசனுக்கு மிகவும் உதவியாகவிருந்து அரசியலைச் செவ்வனே நடத்தச் செய்தார்.

ஸெலுயூகஸ் நிகேடார்:—அலெக்ஸாந்தர் இறந்தபின்னும், இந்தியாவின் வடமேற்கில் கிரேக்க ஆளுகைக்குள் சில மாகாணங்களிருந்தன. அவைகளில் பஞ்சாப் தேசத்தைச் சந்திரகுப்தன் ஜெயித்துவிட்டான். இதைத் திருப்பியடைய வெண்ணிப் பாக்ட்ரியா நாடுகளை யாண்ட **ஸெலுயூகஸ்** என்ற கிரேக்க தளகர்த்தன் சிந்துநதியைக் கடந்து வந்து, கி. மு. 305-ல் சந்திரகுப்தனை எதிர்த்துத் தோற்றுன். ஆனல் இருவரும் சமாதான மடைந்தனர்.

செலூயூகஸ் மேற்கூறிய சமாதானத்தின்படி **மெகஸ் தனிஸ்** என்னும் கிரேக்கரை இராஜதூதராகப் பாடலீ புத்திரத்திற்கு அனுப்பினன். இவர் அங்குச் சென்று, தாம் கண்டவற்றை ஒரு புத்தக ரூபமாய் எழுதியுள்ளார். அப்புத்தகமே **இண்டிகா** எனப்படும். இதிலிருந்து பாடலீ புத்திரத்தின் அரண்மனை, அரசியல் நிர்வாகமுறை, இராணுவம், மக்களின் நிலை, இராஜ்யத்தின் பரப்பு முத லியவைகளைப் பற்றிய விஷயங்களை நாம் நன்கறிகிறோம்.

சந்திரகுப்தன் செய்து முடித்த வேலைகள் :—சந்திரகுப்தன் நாட்டை நன்கு அரசு புரிந்தான். இவன் தலைநகரம் **பாடலீபுத்திரம்** என்பது. இதற்குப் **புஷ்பகிரி** என்றும் பெயர். இந்நகரம் ஒன்பது மைல் நீளமும், ஒன்றரை மைல் அகல மும் உள்ளதாயிருந்தது. ஒரு பலமான கோட்டை நகரைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. இக்கோட்டை 64 வாயில் களையும், 570 ஸ்தூபிகளையும் உடையதாகவிருந்தது. இந் நகரின் கோட்டையைச் சுற்றி எதிரிகள் எளிதில் உட்புகா வண்ணம், ஓர் ஆழமான அகழி வெட்டப்பட்டிருந்தது. அரண்மனையோ மரத்தால் ஆயது. அரண்மனையும், அதைச்சுற்றியுள்ள சோலைகளும், பலவேலைப்பாடுகளமை ந்த கூடங்களும் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தின.

இராஜ்ய நிர்வாக முறை:—மௌரிய இராஜ்யம் வடக்கே இமயமலை முதல் தெற்கே விந்தியமலை வரையில் பரவி யிருந்தது என்னலாம். இப்பெரிய இராஜ்யம் பல மாகா ணங்களாய்ப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாகாணமும் ஓர் இராஜப்பிரதிநிதியால் ஆளப்பட்டு வந்தது. நீதி நெறி தவறாது நடந்தமையால் நாடெங்கும் அமைதி ஏற்பட்டது. கால்வாய்கள் பல வெட்டப்பட்டு வேளாண்மை விருத்தி யடைந்தது. போக்குவரவுச் சாதனங்களும் நன்கு கவனிக்கப்பட்டன.

இராணுவம் :—சந்திரகுப்தனது இராணுவத்தில் தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைப் படைகளு மிருந்தன.

நகரபரிபாலனம்:—நகரம் ஐவர் ஐவர் அடங்கிய ஆறு சிறு சபைகளால் கவனிக்கப்பட்டது. கைத்தொழில், வியாபாரம், கல்வி, சட்டதிட்டங்கள் முதலிய ஒவ்வொன் றையும் மேற்கூறிய ஒவ்வொரு சபையும் தனித்து மேற் பார்வை செய்தன.

மக்கள் ஒரு குறைவுமில்லாமல் சுகமாக வாழ்ந்து இன்புற்றனர்.

சந்திரகுப்தனின் முடிவு:—இவ்வாறு சந்திரகுப்தன் 24 வருஷங்கள் அரசு செலுத்தியபின் இராஜ்யத்தைத் தன் னுடைய மகனிடம் ஒப்படைத்து விட்டான். **பத்திரபாகு** என்ற ஜைனகுருவையடைந்து தானும் சந்நியாசம் மேற் கொண்டு, அக்குருவுடனேயே மைசூர் நாட்டின் காடு களில் வாசம் செய்து தன்னுடைய இறுதிக் காலத்தைக் கழித்தான் என்று சொல்லப்படுகிறது.

கேள்விகள்

1. ஸெலூயூகஸ் நிகேடார் யார் ?
2. சாணக்கியரைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.
3. மெகஸ்தனிஸ் எழுதிவைத்த புத்தகத்தின் பெயர் யாது ?
4. மௌரிய அரசியல் நிர்வாகத்தைப்பற்றிப் பத்துவரிகள் எழுதுக.

13. அசோகர் (கி. மு. 272—231)

சந்திரகுப்தன் இறந்தபின்னர், அவன் புத்திரனை



பிந்துசாரன் பல வருடங்கள் இராஜ்யபாரம் வகித்தான். அவனும் நல்ல வீரனாகவே இருந்தான். அவன் குமாரனே உலகக் கியாதிபெற்ற **அசோகர்** ஆவர்.

கலிங்கப் போர்:—கலிங்க தேசத்தில் அசோகர் காலத்தில் ஒரு கலகம் ஏற்பட்டது. அதை அடக்குவதற்காக, இவர் அந் நாட்டின்மீது படையெடுத்தார். கி. மு. 261-ல் போர் நடந்தது. அதில் அசோகர் வெற்றி பெற்ருர். அப்போரில் 10,000 வீரர்கள் கொல்லப் பட்டனர்.



அசோகர் தூண்

புத்த மதத்தைத் தழுவுதல்:-கலிங்கப் போரில் எண்ணிறந்தவர்கள் உயிரிழந்ததையும், பலர் காயமடைந்ததையும் கண்டு அசோகரது மனம் தவித்தது. உயிர்வதை செய்வதை வெறுத்தார்; மக்களைத் தம் வழிப்படுத்தி அவர்களின் மனதைக் கவர்ந்து, அன்புடன் அரசுபுரிவதே நல்லவழி யெனத் தீர்மானித்தார்; அன்று முதல் போரை யொழித்தார்; அஹிம்சையைக் கைக்கொண்டார்; மாமிசத்தைத் தவிர்த்தார்; புத்தமதக் கொள்கைகளைப் பின்பற்றினர். இவ்வாறு அசோகர் தம் வாழ்க்கையை நல்ல வழியில் செலுத்தினர்.

புத்த மதத்தைப் பரவச்செய்தல்:—புத்தமதத்தைப் பரவச் செய்வதற்காக அசோகர், அம் மதக் கொள்கைகளைக் கற்றூண்களிலும், பாறைகளிலும், குகைகளிலும்

வெட்டுவித்தார். இப்பொழுதும் ஒரிஸ்ஸா முதலிய நாடுகளில் அக்கல்வெட்டுகள் கிடைக்கின்றன. எகிப்து, சீனு முதலிய வேற்று நாடுகளுக்கும் இவர் புத்த சந்நியாசிகளையனுப்பி, மதப் பிரசாரம் செய்யச் செய்தார். இவர் புத்த மதத்தைப் பரப்புவதற்காக இலங்கைத்தீவுக்குத் தமது சகோதரனை **மஹேந்திரனை** யனுப்பினார். சில பிரத்தியேக அதிகாரிகளாகத் **தர்ம மகா மாத்திரர்கள்** எனச் சிலரை ஏற்படுத்தி, அவர்களைக்கொண்டு தம் பிரஜைகள் சரிவரப் புத்தமதக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றார்களாவென்று மேற்பார்வையிடச் செய்தார்.

அசோகர் கல்வெட்டுகளினின்றும் நாம் அறியும் விஷயங்களாவன:

1. மக்கள் பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

2. மக்கள் இராஜ விசுவாசமுடையவர்களா யிருக்க வேண்டும்.

3. அனைவரும் அஹிம்சை, உண்மை முதலியவைகளைக் கடைப்பிடித்தல் அவசியம்.

அசோகர் செய்த சேவை:—பிரஜைகள் மேன்மையடையப் பல நன்மைகளை அசோகர் செய்தார். இவர் சாலைகளை அமைத்தார்; சத்திரங்களைக் கட்டினார்; குளங்களை வெட்டினார்; நீர்ப்பாசன வசதிகளைச் செய்தார்; ஜனங்களுக்கும் மிருகங்களுக்கும் வைத்திய சாலைகளை யமைத்தார். எல்லா மதத்தினரையும் சமமாகப் பாவித்தார்.

அசோகரின் அரசியல் முறை:—அசோகருடைய இராஜ்யம் வடக்கே இமயமலை முதல் தெற்கே வடபெண்ணை

வரையிலும் பரவியிருந்தது. இப்பெரிய நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, முறையே ஐந்து இராஜப் பிரதிநிதிகளால் ஆட்சி புரியப்பட்டது.

அசோகர் மிகக் கீர்த்தியுடன் நாற்பது ஆண்டுகள் ஆட்சிபுரிந்து, புத்தமதத்தை உலகமதமாக்கி, இந்திய சிற்பத்தை மேம்படுத்தி, மக்களின் வாழ்க்கையை அன்பினல் உயர்த்தினர்.

கேள்விகள்

1. கலிங்கப் போரால் விளைந்த ஒரு முக்கிய பயனைக் கூறுக.
2. அசோகரின் வாழ்க்கையில் மாறுதல் உண்டான விதத்தைக் கூறுக.
3. அசோகர் பௌத்த மதத்தைப் பரவச்செய்ய அனுஷ்டித்த முறைகளில் மூன்றை எழுதுக.
4. அசோகரின் கல்வெட்டுகளினின்றும் நாம் அறியும் விஷயம் யாது?
5. அசோகர் நம் நாட்டிற்குச் செய்த சேவை என்ன?
6. அசோகரின் இராஜ்ய விஸ்தீரணத்தைக் காட்ட ஒரு படம் வரைக.

---

14. மௌரியர்களுக்குப்பின் வந்த அரசர்கள்
(கி. மு. 185—கி. பி. 78)

மௌரிய வம்சச் சிதைவு:—அசோகர் காலத்திற்குப் பிறகு, மகதராஜ்யம் சீர்குலைந்து அழிய ஆரம்பித்தது. பின்வந்த மௌரிய வம்ச அரசர்கள் வலிமையிற் குறைந்தவர்களா யிருந்ததால், இராஜ்யத்தின் பல பாகங்களையும் பலர் கைப்பற்றினர். சந்திரகுப்தனல் ஜெயிக்கப்பட்ட

வடமேற்கு இந்திய நாடுகள் மீண்டும் **மினண்டர்** என்ற கிரேக்க அரசரால் பிடிக்கப்பட்டன. அவர் பலம் பொருந்தியவராய் விளங்கினர். தெற்கில் கலிங்க நாடும் சுயாதீன மடைந்தது.

சுங்கவம்சம்:—கி. மு. 185 வரை மௌரிய வம்சத்து அரசர்கள் மகத இராஜ்யத்தை ஆண்டனர். இவர்களில் கடைசி யரசன் **பிரகத்திரதன்.** இவனது சேனதிபதியான **புஷ்யமித்திர சுங்கன்** தன் அரசனைக் கொன்று தானே மன்னனானன்.

புஷ்யமித்திர சுங்கன் சிறந்த வீரன். ஆந்திர மன்னரின் ஆதிக்கத்தை யடக்கி, இவன் புகழ்பெற்றான். இது இவ்வாறிருக்க, மினண்டர் ஒரு படையுடன் படையெடுத்துப் பாடலீபுத்திரம் வரை வந்தார். புஷ்யமித்திரன் அவரை வென்று, அவரைப் புறங்காட்டி ஓடச் செய்தான். ஸம்ஸ்கிருத பாஷையில் **வியாகரண சாஸ்திரம்** எழுதிய **பதஞ்சலி**, இவ்வரசனுடன் இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

புஷ்யமித்திரன் பிறகு கலிங்க நாட்டரசனான **காரவேலன்** என்பவனுடன் சண்டை செய்தான். கடைசியாய்ப் புஷ்யமித்திரன் அசுவமேத யாகம் செய்து புகழ்பெற்றான். இவ்வரசன் முப்பத்தைந்தாண்டுகள் அரசுபுரிந்து இறந்தான். இவனுக்குப்பின், இவன் குமாரன் **அக்னிமித்திரன்** சிலகாலம் அரசு செலுத்தினன்.

கண்வ வம்சம் (கி. மு. 72—28):-சுங்க வம்சக் கடைசி யரசன் **தேவபூதி.** அவனது மந்திரியான **கண்வ கோத்திர வாசுதேவர்** ஒரு பிராமணர். இவர் தேவபூதியைக் கொன்று, தாமே முடிசூட்டிக்கொண்டு கண்வ வம்சத்தை ஸ்தாபித்தார். இவ்வம்சத்தரசர்கள் சுமார் 45 வருடங்களே யாண்ட

னர். இவ்வம்சக் கடைசியரசன் ஓர் ஆந்திர அரசனுல் கொல்லப்பட்டான்.

ஆந்திரர்கள்: ஆந்திர அரசர்கள் மகத இராஜ்யத்தைக் கைப்பற்றியபின், தங்கள் இராஜ்யத்தை வடக்கில் வெகு தூரம் வரையில் பரவச் செய்தனர். இவர்களைப் பற்றி நீங்கள் விரிவாகத், **தக்காண அரசகுடும்பங்கள்** என்ற பாடத்தில் படிப்பீகள்.

கேள்விகள்

1. சுங்க வம்சத்தை ஸ்தாபித்தவர் யார்?
2. சுங்க வம்சம் எவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டது?
3. மினண்டர் யார்?
4. கண்வர்களைப்பற்றி ஒரு குறிப்பு வரைக.

---

15. கனிஷ்கர் (சுமார் கி. பி. 120—156)

குஷாணர்களும் கனிஷ்கரும்:—கி. பி. முதலாவது நூற்ருண்டில் மத்திய ஆசியாவில் வசித்த மங்கோலிய ஜாதியைச் சேர்ந்த **யூச்சிய** வகுப்பில் **குஷாணர்** என்ற பிரிவினர் இந்தியாவிற்குள் புகுந்தனர். இவர்களின் தலைவரான **முதலாவது காட்பீஸஸ்** வடமேற்கு இந்தியாவில் ஓர் இராஜ்யத்தை ஏற்படுத்தினர். இவரும் இவர் சந்ததியாரும் குஷாணர்கள் எனப்படுவர். இவ்வம்சத்தரசர்களில் மிகக் கீர்த்திபெற்றவர் **கனிஷ்கர்.**

கனிஷ்கரின் வெற்றிகள்:—கனிஷ்கர் **வாஜேஷ்கர்** என்பவரின் புதல்வர். இவர் சிறந்த புத்திமான்; நல்ல வீரர்;

கல்வி கேள்விகளில் தேர்ந்தவர்; பரந்த நோக்க முடையவர்.

கனிஷ்கர் காஷ்மீரம், யார்க்கண்டு, காஷ்கார் முதலிய நாடுகளை ஜெயித்துப் புருஷபுரத்தைத் (பிஷாவர்) தலை



நகராய்க்கொண்டார். இங்கே, அழகு பொருந்திய புத்த ஸ்தூபம் ஒன்று கட்டப்பட்டது.

கனிஷ்கர் அசோகரைப்போல புத்தமதப் பற்றுள்ளவர். ஒரு சமயம் பாடலீபுரச் சிற்றரசரைத் தாக்கி, அங்கு வசித்த புத்த சாஸ்திர நிபுணரான **அசுவகோஷர்** என்பவரைத் தம்முடன் அழைத்து வந்து, பிறகு புத்தமதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். இவர், சுமார் 500 புத்த சந்நியாசிகளை வரவழைத்து, ஒரு சபை கூட்டிப் புத்தமதப் புது சம்பிரதாய நூல்களை எழுதச் செய்தார். இவர் காலத்தில் புத்தமதம் ஒரு பெருத்த மாறுபாட்டை யடைந்தது. புத்தரைத் தெய்வமாய் எண்ணிப் புத்த விக்கிரகங்களைச் செய்து ஆராதிக்கத் தொடங்கினர். கோயில்கள் கட்டப்பட்டன. உற்சவங்கள் நடத்தப்பட்டன. இப் புதிய முறைகளைக் கைப்பற்றியவர்கள் **மஹாயனர்கள்** எனப்பட்டனர். பழைய முறைகளை அனுஷ்டித்தவர்கள் **ஹீனயனர்கள்** எனப்பட்டனர். மேற்கூறியவாறு அசோகரைப்போல் புத்த மதத்தைப் பரவச் செய்ததால், கனிஷ்கரை **இரண்டாம் அசோகர்** எனக் கூறுவது வழக்கம்.

கனிஷ்க இராஜ்யச் சிறப்பு :—கேர்த்தியான உருவச் சிலைகள் இவர் காலத்தில் செய்யப்பட்டன. **சரகர்** என்ற மருத்துவ சாஸ்திர நிபுணர் இக்காலத்தவர். இவர் காலத்தில் சம்ஸ்கிருதத்தில் அரிய நூல்கள் எழுதப்பட்டன; தங்க நாணயங்கள் வழங்கின; மேல் நாடுகளுடன் வியாபாரம் செய்தல் பெருகிற்று. இவ்வாறு கனிஷ்கர் ஆட்சி சிறப்புடன் விளங்கிற்று.

கனிஷ்கர் நாணயங்கள்

குஷாண இராஜ்யம் க்ஷீணித்தல் :—கனிஷ்கர் சுமார் கி. பி. 156 வரை ஆட்சி புரிந்தார். பிறகு இவர் கொல்லப்

பட்டார். இவருக்குப்பின் ஹுவிஷ்கரும், பிறகு **வாசுதேவரும்** ஆண்டனர். பிறகு இவ்வம்சம் க்ஷீணிக்கலாயிற்று. குஷாண இராஜ்யத்தின் பெரும்பாகம், கி. பி. நான்காம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் குப்தவம்ச அரசர்கள் வசமாயிற்று.

கேள்விகள்

1. குஷாணர்கள் யார் ?
2. கனிஷ்கரால்ஜெயிக்கப்பட்ட ஏதாவது மூன்றுநாடுகளைக் கூறுக ?
3. கனிஷ்கர் இரண்டாம் அசோகரென அழைக்கப்படுவானேன் ?
4. மஹாயனர்கள் என்றுல் யார் ?
5. குஷாணராஜ்யத்தின் பெருமையை விளக்குக.

---

16. குப்தர்கள் காலம் (கி. பி. 320—606)

கி. பி. நான்காம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஒரு பிரபலமான அரசபரம்பரையார் மகத ராஜ்யத்தை ஆளத் தொடங்கினர். அவர்கள் குப்த வம்சத்தார் எனப்படுவர்.

முதலாம் சந்திரகுப்தன்: பாடலீபுத்திரத்தில் **ஸ்ரீ குப்தன்** என்ற ஒரு தலைவன் தன்னை க்ஷத்திரியன் எனச் சொல்லிக்கொண்டு, மகதராஜ்யத்தின் ஒரு பாகத்திற்கு அதிபதியானன். இவனுக்குப் பிறகு, இவன் குமாரன் **கடோற்கஜன்** சுமார் கி. பி. 275-ல் மன்னனுனன். இவனுடைய குமாரனே **முதலாம் சந்திரகுப்தன்.**

இவன் சுமார் கி. பி. 320-ல் அரசனுனன். இவன் லிச்சாவிகுல இராஜகுமாரியான **குமாரதேவியை** மணம் புரிந்து

கொண்டான். இராஜ்யத்தைப் பலப்படுத்திக்கொண்டு பாடலீபுத்திரத்தையும், அதைச் சுற்றியுள்ள நாடுகளையும்



ஜெயித்து, இவன் குப்தஸாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தான். இவன் சுமார் கி. பி. 330-ல் இறந்தான்.

சமுத்திரகுப்தன்:—சந்திரகுப்தனுக்குப் பிறகு, அவன் குமாரன் **சமுத்திரகுப்தன்** அரசனானான். இவன் போரில்

வல்லவன்; கலைகளில் தேர்ந்தவன்; சங்கீதத்தில் தேர்ந்தவன்; நாடுகளை ஜெயிப்பதில் மிகுந்த ஆசைகொண்டவன்.

சமுத்திரகுப்தனின் வெற்றிகள்.—கோசலம், கலிங்கம், பித்தாபூர், காஞ்சி, வெங்கி முதலிய நாடுகள் இவனால் ஜெயிக்கப்பட்டன. ஆனால் தென்னிந்திய நாடுகளை இவன் தன்னுடைய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. பல அரசர்கள் இவனுக்குக் கப்பங் கட்டினார்கள். இலங்கையரசனான **மேகவர்மன்** சமுத்திரகுப்தனிடம் அனுமதி பெற்றுப், புத்தகயாவில் ஒரு மடத்தைக் கட்டினான்.



சமுத்திரகுப்தன் நாணயங்கள்

மேற்கே யமுனை, சம்பல் நதிகள் முதல் கிழக்கே ஹூக்ளி நதி வரையிலும், வடக்கே இமயமலையடிவாரமுதல் தெற்கே நர்மதை நதி வரையிலும் இவனது இராஜ்யம் பரவியிருந்தது.

சமுத்திரகுப்தன் ஓர் அசுவமேத யாகத்தைச் செய்தான்; இந்துமதத்தைப் பாதுகாத்தான்; பலவிதத் தங்க நாணயங்களை வழங்கினான். இவ்வாறு கீர்த்தியுடன் ஆண்டு சுமார் கி. பி. 375-ல் இறந்தான்.

கேள்விகள்

1. முதல் குப்த அரசன் யார்?
2. சமுத்திரகுப்தனின் வெற்றிகளைக் கூறுக.
3. சமுத்திரகுப்தனின் இராஜ்யப் பரப்பை விவரிக்க.

17. சந்திரகுப்த விக்கிரமாதித்தியன்
(கி. பி. 375—413)

சமுத்திரகுப்தனுக்குப் பிறகு, அவன் குமாரன் இரண்டாம் சந்திரகுப்தனெனச் சொல்லப்படும் **சந்திரகுப்த விக்கிரமாதித்தியன்** கி. பி. 375-ல் அரசனானன்.

சந்திரகுப்த விக்கிரமாதித்தியனின் வெற்றிகள்:—இவனும் தகப்பனைப்போல் நல்ல வீரன். இவன் சாகர்களை வென்று, மாளவம், கூர்ஜரம், சௌராஷ்டரம் முதலிய நாடுகளைப் பிடித்துக்கொண்டான். மாளவத்தின் முக்கிய நகரான உஜ்ஜயினியை, இவன் தனது இரண்டாவது பிரதான நகரமாக ஆக்கினன். இவ்வாறு பல நாடுகளை ஜெயித்த தால், இவனை விக்கிரமாதித்தியன் என்பர்.

சீனயாத்திரிகர்:—சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் காலத்தில் சீனவிலிருந்து **பாஹியான்** என்ற ஒரு யாத்திரிகர் பௌத்த மதப் பிறப்பிடமான இந்தியாவைத் தரிசித்துச் செல்ல வந்தார். அவர் பௌத்தமதத்தைச் சார்ந்தவர். அவர் பலவிடங்களுக்கும் சென்று, தாம் சுற்றிப் பார்த்த வற்றையும் விக்கிரமாதித்தனுடைய சிறப்பையும் விவ ரித்து ஒரு புத்தகம் எழுதியுள்ளார். புத்தகயா என்னு மிடம் காடு நிறைந்திருந்த தெனவும், கபிலவாஸ்து, குசி நகரம் முதலிய இடங்களைவிட்டு மக்கள் அகன்று விட்டன ரெனவும் பாஹியானின் புத்தகம் கூறுகிறது.

ஆட்சிச் சிறப்பு:—மக்கள் பயமின்றி யாத்திரை செய்தனர். சரீர ஹிம்சை செய்த குற்றவாளிகளுக்கு அபராதம் மாத்திரம் போடப்பட்டது. நிலவரி குறைத்து வாங்கப்பட்டது. வியாபாரம் விருத்தியடைவதற்காகச் சுங்கவரிகள் குறைக்கப்பட்டன. சந்நியாசிகளுக்கும் நோயாளிகளுக்கும் ஆதரவு ஏற்பட்டது. யாவரும் அஹிம்சையைக் கைக்கொண்டு, இன்புற்று வாழ்ந்தனர்.

சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் கல்விமான்களைப் பெரிதும் ஆதரித்தான். இவனுடைய சபையில் ஒன்பது சிறந்த கல்விமான்கள் மிகப் புகழ் பெற்று விளங்கினர்கள். அவர்கள் விக்கிரமாதித்தியனுடைய சபையின் **நவ மணிகள்** என்று சொல்லப்பட்டார்கள். அவர்கள் **காளிதாஸர், வராஹமிஹிரர், அமரஸிம்ஹர், வேதாளபட்டி, தந்வந்திரி, வரருசி, சாங்குபட்டர், கடகர், பராசபனகர்** என்பவர்கள் ஆவர். இவன் காலத்தில் சம்ஸ்கிருதபாஷை ஓங்கிற்று.

இவன் சுமார் நாற்பது வருடங்கள் வரை அரசு செலுத்தி கி. பி. 413-ல் இறந்தான்.

குப்த இராஜ்ய அழிவு:—இரண்டாம் சந்திரகுப்தனுக்குப் பிறகு, அவன் குமாரன் **குமாரகுப்தன்** கி. பி. 455 வரை அரசு செலுத்தினன். அவனுக்குப்பின், **ஸ்கந்தகுப்தன்** அரசாண்டான். இவன் காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து **ஹூணர்கள்** என்ற ஒரு வகுப்பினர் காபூல், பஞ்சாப் முதலிய நாடுகளைக் கைப்பற்றினர். இந்துஸ்தானத்துக்குள் இவர்கள் பிரவேசிக்காதவாறு ஸ்கந்தகுப்தனல் தடுக்கப்பட்டனர். ஆயினும், இவனுக்குப்பின் வந்தவர்கள் பலமற்றவர்களாயிருந்ததால், ஹூணர்கள் மகதராஜ்யத்தின்மீது அடிக்கடி படையெடுத்தனர். இன்னும் **தோரமானர், மிஹிராகுலர்** என்பவர்கள் வட இந்தியாவின் மேற்குப் பாகத்தைக் கைப்பற்றினர். இக்காரணங்களால் குப்தராஜ்யம் அழிந்துவிட்டது.

கேள்விகள்

1. இரண்டாம் சந்திரகுப்தன் ஜெயித்த நாடுகளைக் கூறுக.
2. பாஹியான் யார்?
3. இரண்டாம் சந்திரகுப்தனின் ஆட்சிச் சிறப்பைக் கூறுக.
4. குப்தராஜ்யம் அழிந்ததற்கு இரண்டு காரணங்கள் கூறுக.

18. ஹர்ஷவர்த்தனன்
(கி. பி. 606—648)

வர்த்தனர்கள்:—முன்பாடத்தில் ஹூணர்கள் மகத இராஜ்யத்தை யழித்து விட்டனரெனச் சொன்னே மன்ரு? அதன்பின் ஒரு நூற்ருண்டு வரை வட இந்தி யாவைக் கீர்த்திபெற்ற மன்னர் எவரும் ஆண்டதாகத் தெரியவில்லை.

நிற்கக் கி. பி. ஆரும் நூற்ருண்டின் கடைசியில் சரஸ் வதி நதிக்கரையில் டில்லிக்குச் சமீபத்திலுள்ள ஸ்ரீகாந்த க்ஷேத்திரமாகிய தனேசுவரத்தில் வர்த்தன வம்சத்தைச் சார்ந்த **பிரபாகர வர்த்தனன்** என்ற ஓர் அரசன் இருந்தான். இவன் ஹூணர்களை யடித்துத் துரத்தினன். இவனுக்கு ஒரு மகளிருந்தாள். அவள் **இராஜ்யஸ்ரீ** எனப்படுவள். அவ ளையே கன்னேசி யரசனை **கிருகவர்மன்** மணம் புரிந்தான். பிரபாகரன் இறந்தபிறகு, அவனுடைய மூத்த மக ஞன **இராஜ்யவர்த்தனன்** அரசனுன். அப்பொழுது கிருக வர்மனை மாளவ அரசன் கொன்றுவிட்டு இராஜ்யஸ்ரீயைச் சிறையிலிட்டான். இதைக் கேட்டமாத்திரத்தில் சினங் கொண்ட இராஜ்யவர்த்தனன் மாளவ அரசனைக்கொன்று, கன்னேசிக்குச் சென்ருன். அப்பொழுது இவன் **சசாங்கன்** என்ற வங்காள அரசனல் கொல்லப்பட்டான். இதற்குள் சிறையினின்றும் இராஜ்யஸ்ரீ தப்பி விந்தியமலைக் காடு களை யடைந்தாள். இராஜ்யவர்த்தனன் இறந்தமையால், இவன் தம்பியான **ஹர்ஷவர்த்தனன்** கி. பி. 606-ல்சிங்காதன மேறினன்.

ஹர்ஷவர்த்தனனின் வெற்றிகள்:—மன்னனய் முடிசூட்டப் பட்டதும் ஹர்ஷன் முதன் முதலில் விந்திய பருவதம் சென்று, தனது சகோதரியைக் கண்டு, அவளை மீட்பித் தான். பிறகு ஆறுவருடங்கள் வரை கூர்ஜரத்திற்கும் வங்

காளத்திற்கு மிடையிலுள்ள நாடுகளின் சிற்றரசர்களுடன் போர் புரிந்து, பல நாடுகளை ஜெயித்தான். பிறகு கி. பி. 620-ல் விந்திய பருவதத்தைக் கடந்து, தக்காணத்தைத்



தாக்க ஹர்ஷன் முயன்றான். அப்போது சாளுக்கிய அரசனை இரண்டாம் புலிகேசி என்பவனால் விந்தியக் கணவாய்களில் தோற்கடிக்கப்பட்டான். ஆதலால் இவனுடைய

இராஜ்யம் நர்மதைக் கப்பால் பரவவில்லை. இவன் கன்யாகுப்ஜத்தைத் தலைநகராகச் செய்துகொண்டான். சோலைகளாலும், ஏரிகளாலும், மாடமாளிகைகளாலும் இந்நகரை ஹர்ஷன் அலங்கரித்தான்.

ஹர்ஷன் எல்லா மதத்தினரையும் சமமாய்ப் பாவித்தான். சிவன், விஷ்ணு, சூரியன் முதலிய மூர்த்திகளுக்கு ஆலயங்களைக் கட்டினான். உன்னதமான ஆலயம் ஒன்றைக் கட்டி, அதில் 30 அடி உயரமுள்ள புத்த விக்கிரகம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தான். ஹர்ஷவர்த்தனனின் மேன்மையைப்பற்றி விரிவாக நீங்கள் அடுத்த பாடத்தில் படிப்பீர்கள்.

கேள்விகள்

1. வர்த்தனர் வம்சத்தின் முதலரசன் யார்?
2. ஹர்ஷன் இராஜ்யஸ்ரீயை எவ்வாறு மீட்பித்தான்?
3. ஹர்ஷன் யாரால் எப்பொழுது தோற்கடிக்கப்பட்டான்?

---

19. ஹர்ஷனின் மேன்மை

ஹர்ஷன் எல்லா மதத்தினரையும் அன்புடன் நடத்தினனென்று முன்பாடத்தில் படித்தீர்கள். இதிலிருந்தே இவனுடைய பரந்த நோக்கம் உங்களுக்கு நன்கு புலப்படும்.

இவன் முதலில் சிவனை ஆராதித்து வந்தான். பிறகு வரவரப் புத்தமதத்தில் அதிகப் பற்றுள்ளவன் ஆனான். மதசம்பந்தமான திருவிழா ஒன்று, ஐந்து வருடங்களுக்கொருமுறை ஹர்ஷனால் நடத்தப்பட்டது. அதில் பொன், வெள்ளி, இரத்தினங்கள் முதலியன பலருக்குத் தானமாய்க் கொடுக்கப்பட்டன.

கி. பி. 643-ல் கன்னேசி நகரில் ஒரு மகாசபை கூட்டப்பட்டது. இதற்குப் பல சாஸ்திர நிபுணர்கள் விஜயம் செய்தனர். இக் கூட்டத்திற்கு 19 மன்னர்களும், 3,000 சந்நியாசிகளும், 3,000 பிராமணர்களும், **நாலந்தா** சர்வ கலாசாலையிலிருந்து 1,000 வித்துவான்களும் வந்திருந்தார்களெனத் தெரிகிறது.

கலை வளர்ச்சி:-ஹர்ஷன் ஒரு பெரிய கல்விமான். இவன் **ரத்னுவளி, ப்ரியதர்சிகா, நாகானந்தம்** என்ற சிறந்த நாடகங்களை எழுதினன். இவன் சபையைப் **பாணர்** என்ற கவிசிரேஷ்டர் அலங்கரித்தார். அவரே **ஹர்ஷ சரிதையை** எழுதியுள்ள பெரியார். மகத ராஜ்யத்தில் நாலந்தா சர்வகலாசாலை மிகக் கீர்த்தியுடன் விளங்க ஆரம்பித்தது. இதற்கு மானியமாகப் பல அரசர்கள் 200 கிராமங்கள் வரை கொடுத்ததாகத் தெரிகிறது.

யுவான்சுவாங்:—ஹர்ஷன் காலத்தில் **யுவான்சுவாங்** என்ற சீன யாத்திரிகர் ஹர்ஷ ராஜ்யத்தின் எல்லாப் பாகங்களுக்கும் சென்று, தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் ஒரு புத்தகமாய் எழுதியிருக்கிருர். இதனின்றும் நாம் பல அரிய விஷயங்களை யறிகின்ருேம்.

ஹர்ஷன் ஆட்சிச் சிறப்பு:—இவன் பல சத்திரங்களைக் கட்டினன்; நல்ல ரஸ்தாக்களை யமைத்தான்; ரஸ்தாக்களில் திருடர் பயமில்லாதிருக்கச் செய்தான்; வைத்திய சாலைகள் பலவற்றை ஏற்படுத்தினன். இவன் காலத்தில் குற்றங்கள் அற்பமாயின; நிலவரி ஆறிலொரு பங்கு வசூலிக்கப்பட்டது; கலைகள் விருத்தியடைந்தன; நாடு நீர் வளத்திலும் நிலவளத்திலும் சிறந்து ஜனங்கள் இன்புற்று வாழ்ந்தனர்.

மேற்கூறியவாறு மேன்மை பெற்ற ஹர்ஷன் கி. பி. 648-ல் இறந்தான்.

இவனுக்குப் பின், வட இந்தியாவில் குழப்பம் உண்டாகி, வர்த்தனர்களின் இராஜ்யம் சிதைவுற்றுப் பல சிறு இராஜ்யங்கள் தோன்றின.

கேள்விகள்

1. ஹர்ஷன் மதவிஷயமாகச் செய்த காரியங்களைக் கூறுக.
2. ஹர்ஷன் எழுதிய நூல்களைக் கூறுக.
3. யுவான்சுவாங் எழுதிய புத்தகத்தினின்றும் நாம் அறிவதென்ன ?
4. ஹர்ஷனது அரசாட்சியின் மேன்மையை விவரிக்க.

---

20. இராஜபுத்திரர்களின் எழுச்சி

முன் பாடத்தில் ஹர்ஷ ஸாம்ராஜ்யம் சிதைவுற்றதென்றும், அதனல் பல சிறு இராஜ்யங்கள் தோன்றின வென்றும் படித்தோம். அச்சிறிய இராஜ்யங்களைப் பெரும்பாலும் இராஜபுத்திர அரசர்கள் ஆண்டனர்.

இராஜபுத்திரர்கள்:—இவர்கள் அக்னி குலத்தில் உதித்தவர்களென்றும், சுத்த க்ஷத்திரியர்களென்றும் கூறப்படுவார்கள். இவர்கள் யார், எங்கிருந்து வந்தனர் என்பவைகளைச் சந்தேகமறச் சொல்லவியலாது. மத்திய ஆசியாவிலிருந்து நம் நாட்டிற்கு வந்த சாகர்கள், ஹூணர்கள் முதலியோர் இந்துக்களுடன் நாளடைவில் கலந்துவிட்டனரென்றும், அவர்களே இராஜபுத்திரர்களென்றும் சிலர் கூறுவர். இவர்கள் தற்போது இராஜபுதனம், பஞ்சாப், மாளவம் முதலிய நாடுகளில் வசிக்கிருர்கள்.

இராஜபுத்திரர்களின் வாழ்க்கையும் குணுதிசயங்களும்:—இவர்கள் இந்திய நடையுடை பாவனைகளைப் பின்பற்றி, இந்து தர்மங்களைப் பாதுகாத்தனர். இவர்கள் அனைவரும் சுத்த

வீரர்கள்; குதிரையேறிச் சவாரி செய்வதில் வல்லவர்கள்; புறங்காட்டி ஓடுவதென்பதை யறியாதவர்கள்; இராஜ புத்திர ஸ்திரீகளோ கற்புக்கரசிகள். இராஜபுத்திர வீரர் கள் யுத்தத்தில் தோற்றுப்போய் இராஜபுத்திர ஸ்திரீ கள் பகைவர்களின் கையில் அகப்பட நேர்ந்தால் பெரிய தீயை வளர்த்து தங்கள் மானத்தைக் காக்கும் பொருட்டு அதில் குதித்து இறந்துவிடுவர். இச்செயலை **ஜோஹர்** என்பர். இராஜபுத்திரர்கள் இராஜபுத்திரப் பெண்களுக்கு மிகுந்த மதிப்புத் தந்திருந்தார்கள். பகைவர்களான இரண்டு இராஜபுத்திர அரசர்களில் ஒருவரை வேறொரு பகைவன் தாக்கினால், அவருடைய பெண் தனது வளையலைக் கழற் றித் தன் தகப்பனுக்குப் பகையான இராஜபுத்திர அரசருக்கு அனுப்புவாள். அவர் அதைப் பெற்றுக் கொண்டு, அப் பெண்ணினுடைய தகப்பனுக்கு உதவி செய்ய வருவார். பகைவனை இருவரும் சேர்ந்து தோற் கடித்து விடுவார்கள். இப்படி வளையலை அனுப்பி உதவி பெறும் வழக்கத்திற்கு **வளையல் உடன்பாடு** என்று பெயர்.

வட இந்தியாவில் 8-ம் நூற்றாண்டிலிருந்து 12-ம் நூற் றாண்டிற்குள் பல சிறு இராஜபுத்திர ராஜ்யங்கள் ஏற் பட்டன. அவைகளில் **டில்லி, ஆஜ்மீர், கன்னோசி, மீவார், கூர்ஜரம்** முதலியன முக்கியமானவை. இந்த ஒவ்வொரு சிற்றரசரும் தனித்தனிக் கௌரவம் பாராட்ட ஆரம்பித் தனர். இதனால் ஒருவர்மீது ஒருவர் பகைகொண்டனர்; ஒற்றுமை நீங்கியது. ஆதலால் முஸ்லீம்கள் இந்தியாவிற் குள் நுழைய ஏதுவாயிற்று.

கேள்விகள்

1. இராஜபுத்திரர்கள் யார்?
2. இராஜபுத்திரர்களின் குணதிசயங்களைச் சுருக்கிவரைக.
3. இராஜபுத்திரர்கள் ஏன் க்ஷீணித்தனர்?

---

21. தக்காண அரச குடும்பங்கள்

ஆந்திரர்கள்:—கிருஷ்ணு நதிக்கும் விந்திய மலைக்கும் இடையிலுள்ள பாகத்தைத் **தக்காணம்** என்பர். இது ஒரு பீடபூமி. இதில் கோதாவரி நதிக்கும், கிருஷ்ணு நதிக்கும் மத்தியிலுள்ள பிரதேசத்தின் கிழக்குப்பாகம் **தெலிங்கானம்** என்று வழங்கப்பட்டுவந்தது.

இந்நாட்டின் முக்கிய நகர் **ஸ்ரீகாகுளம்.** பல ஆந்திர அரசர்கள் சற்றேறக்குறைய 450 ஆண்டுகள் வரை இந் நாட்டை ஆட்சி புரிந்தனர். ஆந்திரர்கள் யாரென்பதை நிச்சயமாய்க் கூறமுடியவில்லை. இவர்களுடைய பாஷை தெலுங்கு. இந்த ஆந்திர அரசர்கள் **சாதவாஹன** வம்சத் தவரெனக் கூறப்படுகிறது.

கி. மு. 27-ல் ஆந்திர அரசர்கள் கண்வ வம்சத்தா ரைத் தோற்கடித்து மகத இராஜ்யத்தை வசப்படுத்தினர். பின்வந்த ஆந்திர அரசர்களில் **கௌதமி புத்திர சாதகர்ணி,** சாகர்களை முறியடித்துக் கீர்த்திபெற்றார். அவருக்குப்பின் அரசு செலுத்தியவர்களில், **எக்ஞ ஸ்ரீ சாதகர்ணி** ஒருவராவர். கடைசியாய், சுமார் கி. பி. 225-ல் ஆந்திர வம்சம் க்ஷீணிக்கலாயிற்று.

ஆந்திர அரசர்களுக்குப் பின், **கடம்ப** வம்சத்தினர் ஆந்திர ராஜ்யத்தை ஆட்சிபுரிந்தனர்.

கடம்ப வம்சம்:—இவ்வம்சத்தினர் தங்கள் வீடுகளுக்கு முன்புறத்தில் கடம்ப விருக்ஷத்தை வைத்து வளர்த்தனர். அதனாலேயே இவர்கள் வம்சத்திற்குக் கடம்ப வம்ச மெனப் பெயர் வந்தது. இவர்கள் பிராமணர்கள். இக் கடம்ப வம்சத்தை ஸ்தாபித்தவர் **மயூரசர்மன்** என்ற ஒரு அந்தணர். கடம்ப அரசர்கள் தங்கள் அயல்நாட்டு அரசர்களான **கங்கர்** முதலியவர்களுடன் அடிக்கடி போரா டவேண்டி யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இக்கடம்ப

வம்சத்தினரின் சுயேச்சை ஆளுகை கி. பி. ஆறும் நூற்றூண்டின் மத்தியில் முடிந்துவிட்டது.

கங்கவம்சம்:—மைசூர் ராஜ்யத்தின் பெரும்பாகமும், காவிரி நதிப் பிரதேசமும் கி. பி. இரண்டாம் நூற்றூண்டு முதல் கங்கவம்சத்தினர் ஆளுகைக்குட்பட்டிருந்தன. இவ் வம்சத்தின் ஒரு பிரிவினர் கலிங்க நாட்டை யாண்டனர். கங்கவம்ச ஆட்சி கி. பி. 11-ம் நூற்றூண்டில் சோழ அரசர்களாற் குலைக்கப்பட்டது.

கேள்விகள்

1. ஆந்திர ராஜ்யம் எங்கு ஸ்தாபிக்கப்பட்டது ? அதன் பெயரென்ன ?
2. ஆந்திர அரசர்களுள் இருவர் பெயரைக் குறிப்பிடுக.
3. தக்காணத்தில் ஆந்திரர்களுக்குப் பின் தோன்றிய, இரண்டு வம்சங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

---

22. சாளுக்கியர்கள்

சாளுக்கியர்கள் இராஜபுத்திர சந்ததியைச் சார்ந்தவர்களெனக் கருதப்படுகின்றனர். கி. பி. 6-ம் நூற்றூண்டில் கடம்ப, கங்க வம்சத்தவர்களை வென்று, இவர்கள் தக்காணத்தில் தங்கள் இராஜ்யத்தை ஸ்தாபித்தனர். சாளுக்கியர்களின் முதலரசன் **ஜேயசிம்மன்**. இவ்வரசனுக்குப்பிறகு, **முதலாம் புலிகேசி** என்பவன் **வாதாபி** அல்லது **பாதாமி**யைத் தலைநகராய் அமைத்துச் சிலகாலம் ஆண்டுவந்தான்.

இரண்டாம் புலிகேசி (கி. பி. 608—642):—முதலாம் புலிகேசிக்குப் பிறகு, அவனுடைய பேரனை இரண்டாம் புலிகேசி மன்னனானான். இவனுடைய ஆட்சியில் சாளுக்கிய ராஜ்யம் அதிக பெருமை யடைந்தது.

இவன் அஞ்சா நெஞ்சம் படைத்தவன்; நல்ல போர் வீரன். இவன் தக்காணத்தின் பெரும் பகுதியை ஜெயித்

தான். கிழக்குக் கடற்கரையோரத்தில் கிருஷ்ணு நதி முதல் கலிங்கம் வரை வென்ருன். இப்பாகத்திற்குத் தன் சகோதரனை **விஷ்ணுவர்த்தனன்** என்பவனை அரசப்பிரதிநிதியாக நியமித்தான். விஷ்ணுவர்த்தனன் மேற்பார்வையிட்ட நாடே வெங்கி நாடாகும். விஷ்ணுவர்த்தனனின் சந்ததியார்கள் **கிழக்குச் சாளுக்கியர்கள்** எனப்படுவர். இவர்கள், பிறகு சோழ வம்சத்தினருடன் கலந்துவிட்டனர்.

கடைசியாக இரண்டாம் புலிகேசி பல்லவ மன்னனை **நரசிம்மவர்மன்** என்பவனுல் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். வாதாபியும் கைப்பற்றப்பட்டது. இதனுல் சாளுக்கிய ராஜ்யம் சீர்குலையத் தலைப்பட்டது.

இரண்டாம் புலிகேசிக்குப் பிறகு, அவனது புதல்வன் பல்லவர்களை ஜெயித்து காஞ்சீபுரத்தைப் பிடித்துக் கொண்டான். புலிகேசியும், அவனுடைய சந்ததியார்களும் **மேற்குச் சாளுக்கியர்** எனப்படுவர்.

பின்னர், மேற்குச் சாளுக்கியர்களின் பலம் சிறிது சிறிதாகக் குன்றியது. **ராஷ்டிர கூடர்கள்** என்ற புதிய பரம்பரையார் கிளம்பினர்.

கேள்விகள்

1. சாளுக்கியர்கள் யார்?
2. சாளுக்கியர்களின் முதல் மூன்று முக்கிய அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. இரண்டாம் புலிகேசியின் வெற்றிகளை எழுதுக.
4. கிழக்குச் சாளுக்கிய வம்சம் எவ்வாறு தோன்றியது?

23. ராஷ்டிரகூடர்கள் (கி. பி. 750—972)

ராஷ்டிரகூடர்கள் தக்காணத்தில் வசித்த பழைய ஜனங்களின் சந்ததியார்கள். இவர்கள் தங்கள் நாட்டை மகாராஷ்டிரமென்றும், இவர்களில் அரசகுடும்பத்தினர்



எல்லோராவிலுள்ள குகைக்கோயில்

தங்களைக் **கூடர்கள்** என்றும் சொல்லிக்கொண்டமையால், இவர்களுக்கு **ராஷ்டிரகூடர்கள்** என்ற பெயர் வந்தது.

ராஷ்டிரகூட ஆட்சியின் ஆரம்பம்:—இரண்டாம் புலிகேசி யின் சந்ததியார்கள் பலம் குன்றியவர்களா யிருந்தனர்.

அப்பொழுது ராஷ்டிரகூடத் தலைவர்களில் ஒருவனை **தந்திதுர்க்கன்** மேற்குச் சாளுக்கியர்களை வென்று ஆதிக்கம் பெற்றான். இவ்வம்சம் தக்காணத்தில் சுமார் இருநூறு ஆண்டுகள் வரை ஆதிக்கம் பெற்றிருந்தது.

முதலாவது கிருஷ்ணன்:—ராஷ்டிரகூட மன்னர்களில் கீர்த்திபெற்ற அரசர்களில் **முதலாவது கிருஷ்ணன்** ஒருவனாவான். இவன் **எல்லோரா** என்னுமிடத்தில் மலையைக் குடைந்து ஒரு அழகிய **கைலாஸ நாதர்** ஆலயத்தை யமைத்தான். இது உயர்ந்த சித்திர வேலைப்பாடுடன் தற்போதும் விளங்குகிறது.

அமோகவர்ஷன் (கி.பி. 815—877): முதலாவது கிருஷ்ணனுக்குப் பிறகு, இவ்வம்சத்தில் உதித்தவன் அமோகவர்ஷன். இவன் ராஷ்டிரகூட வம்சத்தில் மிகப் புகழ் வாய்ந்த அரசன். இவன் வெங்கிநாட்டுச் சாளுக்கியர்களுடன் நீண்ட காலம் போர் தொடுக்க நேர்ந்தது. இவ்வரசன் தன் தலைநகரை நாஸிக்கினின்றும் மூல்கேட் நகருக்கு மாற்றினான். இவன் ஜைன மதத்தைத் தழுவி அதை ஆதரித்தான்.

இவனுக்குப் பிறகு, ராஷ்டிரகூட வம்சம் சீர்குலைய ஆரம்பித்தது. கி. பி. 973-ல் ஒரு சாளுக்கிய இளவரசனை **தைலப்பன்** என்பவனால், அது அழிக்கப்பட்டுக் கல்யாணிச் சாளுக்கியர்களின் வம்சம் ஸ்தாபிக்கப்பட்டது.

கேள்விகள்

1. ராஷ்டிர கூடர்கள் யார்?
2. கைலாஸ நாதர் கோயில் யாரால் எங்குக் கட்டப்பட்டது? அதன் விசேஷம் என்ன?
3. அமோகவர்ஷன் எப்படிப் புகழ்பெற்றான்?

---

24. கல்யாணிச் சாளுக்கியர்கள்
(கி. பி. 973—1190)

தைலப்பன்:—இவன் ராஷ்டிரகூடர்களை ஜெயித்துச் சாளுக்கியர்களைத் திரும்பவும் ஆதிக்கம் பெறும்படிச் செய்ததைப் பற்றி முன் பாடத்தில் படித்தோம். இவன் **கல்யாணி** என்னும் நகரைத் தன் இராஜ்யத்திற்குத் தலைநகராகச் செய்துகொண்டதால், இவனால் ஸ்தாபிக்கப்பட்ட வம்சத்தைக் கல்யாணிச் சாளுக்கிய வம்சம் என்பர்.

இவன் காலத்தில் சோழ அரசர்கள் தென்னாட்டில் வலிமை பெற்றிருந்தனர். ஆதலால் அடிக்கடி சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் போர்கள் நிகழ்ந்தன.

விக்கிரமாதித்தியன் (கி. பி. 1075—1125) :— கல்யாணிச் சாளுக்கியர்களில் மிகவும் கீர்த்தி பெற்றவன் **விக்கிரமாதித்தியன்.** இவன் சேர, சோழ, பாண்டிய அரசர்களை அடக்கினான். காஞ்சீபுரம் இவன் கைவசம் ஆயிற்று. இவனுடைய சபாமண்டபத்தை யலங்கரித்தவர் **விக்ஞானேசுவரர்** என்ற பெரியார். இவர் இந்துக்களின் சட்டத்திற்கு ஆதாரமாயுள்ள **மிதாட்க்ஷரம்** என்ற கிரந்தத்தை எழுதியிருக்கிறார். காஷ்மீர் தேசத்துக் கவிசிரேஷ்டரான **பில்கணரும்** விக்கிரமாதித்தியனால் ஆதரிக்கப்பட்டுப் பிரகாசித்தார். இவ்வாறு பலவகைகளிலும் விக்கிரமாதித்தியனுடைய புகழ் பரவிற்று.

இந்த விக்கிரமாதித்தியன் காலத்திலேயே **ஹோய்சாலர்கள்** கிளம்ப ஆரம்பித்தனர். ஒரு ஹோய்சாலத் தலைவன் **துவாரசமுத்திரம்** என்னும் நகரத்தை தலை நகராய்க் கொண்ட மைசூர் நாட்டிற்கு இராஜப்பிரதிநிதியாக ஆனான்.

விக்கிரமாதித்தியனின் சந்ததியார்கள் திறமில்லாதவர்களாயிருந்தனர். இதனால் சாளுக்கியர்களின் புகழ் வர

வரக் குறையத் தலைப்பட்டது. வாரங்கல்லில் **காகாதித்தியர் களும்**, மைசூரில் **ஹோய்சாலர்களும்** வரவர அதிகாரம் பெற்றுச் சாளுக்கிய இராஜ்யத்தின் பல பாகங்களை வென்று, தனித்தனியே சுயாதீன மடைந்தனர்.

கேள்விகள்

1. கல்யாணிச் சாளுக்கிய வம்சத்தை ஸ்தாபித்தவன் யார்?
2. கல்யாணிச் சாளுக்கியர்களுள் கீர்த்தி பெற்றவன் யார்? ஏன்?
3. கல்யாணிச் சாளுக்கியர்களின் வம்சம் அழிந்தபிறகு, தக்காணத்தில் எவ்வம்சங்கள் தோன்றின?

---

25. பல்லவர்கள்

பல்லவர்கள்:—இவர்கள் யாவர் என்பதைப் பற்றி பல அபிப்பிராய பேதங்கள் உள. ஒரு சாரார் இவர்களைப் **பார்த்தியர்** என்பவரின் சந்ததியார்களெனக் கூறுகின்றனர்.

ஆந்திரர்களின் ஆதிக்கம் குறைவுபடவும் பல்லவர்கள் காலக்கிரமத்தில் அதிகாரம் பெற ஆரம்பித்தனர். பல்லவர்களில் மூன்று பிரிவுகளிருந்ததாகவும், அவைகளில் மூன்ரும் பிரிவே கீர்த்திபெற்றதெனவும் சரித்திர ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. அக்காலத்தில் வட, தென் ஆற்காடுகள், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்கள் பல்லவ இராஜ்யத்தில் அடங்கியிருந்தன.

கீர்த்திபெற்ற பல்லவர்கள் (சுமார் கி. பி. 590—900):—இவ்வம்சத்தின் முதலரசன் **சிம்ஹவிஷ்ணு** என்பவன். இவன் சோழர்களையும் பாண்டியர்களையும் வென்றிருக்கக்

கூடுமென்று தெரிகிறது. முதன் முதலில் தென்னிந்தியாவில் கருங்கல் கட்டடங்கள் கட்டினவர்கள் இவர்களே. பல்லவர்கள் **தக்ஷசிலை, உஜ்ஜயினி, காஞ்சீபுரம்** முதலிய இடங்களைத் தங்கள் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள்.

மஹேந்திரவர்மன் :—சிம்ஹ விஷ்ணுவிற்குப் பிறகு, அவன் குமாரனான மஹேந்திரவர்மன் பல்லவர்களின் புகழை உயர்த்தினான். இவன் பல்லவ அரசர்கள் எல்லோரினும் மிகச் சிறந்தவன். இவன் அநேக குளங்களை வெட்டினான்; குகைக்கோயில்களைக் கட்டினான். இவன் திருச்சிராப்பள்ளி மலையில் இரண்டு குகைகளைக் குடைந்தான். அவைகளுக்கு **பல்லவகுகைகள்** என்று பெயர். இவன் முதலில் ஜைனனாயிருந்தான். பிறகு சைவ நாயன்மார்களிலொருவரான **அப்பர்** இவனைச் சைவராக்கினார்.

இவன் மேற்குச் சாளுக்கிய அரசனான இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டான்.

நரசிம்மவர்மன்:—மஹேந்திரவர்மனுக்குப் பிறகு, இவனுடைய மகன் அரசனாகி இரண்டாம் புலிகேசியைக் கொன்று வாதாபியைக் கைப்பற்றினான். இவன் சிறந்த வீரன். இவன் சேர சோழ பாண்டியர்களையும் அடக்கினான். இவனிடத்தில் ஒரு கப்பற் படையுமிருந்தது. இதைக்கொண்டு இலங்கைத் தீவை வென்றான். இவனுக்கு **மாமல்லன்** என்றொரு பெயரும் உண்டு.

சென்னப்பட்டினத்திற்குத் தெற்கில் சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள **மகாபலிபுரம்** என்பது பல்லவ நாட்டின் துறைமுகமாய் விளங்கிற்று. இங்கே உலகம் புகழும்படியான அழகிய வேலைப்பாடுகளுடன் மலைகளைக் குடைந்து **சப்த ரதங்கள்** என்று சொல்லப்பட்ட ஏழுகோயில்களை யமைத்து இம்மன்னன் கீர்த்திபெற்றான். பல்லவத்

தலைநகரான காஞ்சீபுரத்திலுள்ள **ஏகாம்பரேசுவரர்** ஆலயமும் இவனாலேயே கட்டப்பட்டது. நரசிம்மவர்மன் ஆண்ட காலத்தில்தான் சீனயாத்திரிகரான **யுவான் சுவாங்** காஞ்சீபுரத்திற்கு வந்தார். பல்லவர்களின் பாஷை தமிழென்றும், இவர்களால் வேளாண்மை செவ்வனே கவனிக்கப்பட்டதென்றும், மக்கள் இன்புற்றிருந்தனரென்றும் இச்சீனரது குறிப்பு கூறுகிறது.



மகாபலிபுரத்திலுள்ள குகைக் கோயில்கள்

நந்திவர்மப் பல்லவமல்லன்:—நரசிம்மவர்மனுக்குப் பிறகு, **நந்திவர்மப் பல்லவமல்லன்** கீர்த்திபெற்றவன். இவன் **விஷ்ணு** பக்தன். இவன் பாண்டிய அரசனை **மாரவர்ம அரிகேசரி** என்பவனை ஜெயித்ததாகத் தெரியவருகிறது.

பல்லவர்களின் அழிவு:—பல்லவ ராஜ்யம் வரவர க்ஷீணிக்கலாயிற்று. சாளுக்கியர்களும் சோழர்களும் பல்லவர்களைப் பன்முறை தாக்கினர். கடைசியாய் **விஜயாலய**

சோழன் மகனுகிய **ஆதித்திய சோழன்** பல்லவ அரசர்களை வென்று, அவர்களின் ஆதிக்கத்தை யழித்தான். பிறகு பல்லவத் தலைவர்கள் சோழ அரசர்களின்கீழ்ச் சிற்றரசர்களாயினர்.

கேள்விகள்

1. பல்லவ வம்சத்தை ஸ்தாபித்தவன் யார் ?
2. பல்லவ அரசர்களில் கீர்த்திபெற்ற இருவரைக் கூறுக.
3. உலகம் புகழும்படி நரசிம்மவர்மன் என்ன செய்தான்?
4. பல்லவ நாட்டின் தலைநகர் யாது ?

---

26. தென்னிந்திய இராஜ்யங்கள்

தென்னிந்தியா தமிழ்ப் பாஷையைப் பேசும் தமிழர்களின் நாடாகும். இந்நாட்டிற்கு மேற்கில் அரபிக் கடலும், கிழக்கில் வங்காள விரிகுடாவும், வடக்கில் திருவேங்கட மலையும், தெற்கில் கன்னியாகுமரியும் எல்லைகளாய் விளங்கின.

இதிகாச காலத்திற்கு முன்பே தென்னிந்தியாவில் தமிழர்கள் பெருமையுடன் வாழ்ந்து வந்தார்கள். வேளாண்மை, நெசவு, வர்த்தகம், போர்முறை ஆகியவைகளில் தமிழர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்களுக்கு ஆயுதங்களும், ஆபரணங்களும் செய்யத் தெரியும். இரதங்கள், படகுகள் முதலியவைகளைக் கட்டுவதில் இவர்கள் சமர்த்தர். இவர்கள் தங்கள் நாட்டு விஷயங்களைச் சபைகள் கூட்டி அவற்றின் வாயிலாக நிர்வகித்து வந்தார்கள். பெண்டிரும் இச்சபைகளில் அங்கத்தினர்களா யிருந்

தனர். தமிழர்கள் கல்வி, சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலியவைகளில் தேர்ச்சி பெற்றவர்கள்.

ஆதியில் தமிழ்நாட்டைச் சங்கப்புலவர்கள் என்ற தமிழ்ப்புலவர்கள் மேன்மைப்படுத்தினர். அக்காலத்தில் **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள்** முதலிய நூல்கள்எழுந் தன. பிற்கால புலவர்களில் **கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சேக்கிழார்** முதலிய கவிகளும் **பரிமேலழகர், நச்சினார்க்கினியர்** முதலிய உரையாசிரியர்களும் முக்கியமானவர்கள். அபூர்வ வேலைப்பாடுள்ள ஆயிரக் கணக்கான கோயில்கள் இந் நாட்டில் ஏற்பட்டன. ஆதலால் பல துறைகளிலும் தமிழ் நாடு வெகு நீண்டகாலமாகப் புகழ்வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

இத்தமிழ் நாடு மூன்று மேன்மை பொருந்திய ராஜ் யங்களைக் கொண்டது. அவை சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் ஆகும். இவ்விராஜ்யங்களைப்பற்றிப் பின் வரும் பாடங்களில் படிப்பீர்கள்.

கேள்விகள்

1. தென்னிந்திய ராஜ்யங்கள் யாவை?
2. தமிழ்நாட்டுக் கவிகளில் மூவரைக் குறிப்பிடுக.
3. தமிழ்நாட்டின் எல்லைகளைக் கூறுக.

---

27. சோழ ராஜ்யம்

முன்பாடத்தில் கூறியுள்ள மூன்று தமிழ் ராஜ்யங்க ளில் சோழராஜ்யம் பிற்காலத்தில் மிகவும் மேம்பட்டது. இந்த ராஜ்யம் பல்லவ நாட்டிற்குத் தெற்கிலும், பாண் டிய நாட்டிற்கு வடக்கிலும், குடகு நாட்டிற்குக் கிழக்கிலு மாகப் பரவியிருந்தது. இதைக் காவிரி நதி செழிப்புறச் செய்தது. **உறையூர், காவிரிப்பூம்பட்டினம்** முதலியன இந் நாட்டின் தலைநகரங்களாக விளங்கின.

கரிகாலன்:—ஆதிகாலச் சோழ அரசர்களில் கரிகாலன் என்பவன் மிக்க கீர்த்தி பெற்றவன். இவன் சேர, பாண்டியர்களை வென்றான். வடக்கே படையெடுத்துச்சென்று இமயத்தில் புலிஉருவத்தைச் செதுக்கித் திரும்பினான். இவன் காவிரியின் இருமருங்கும் சுமார் 100 மைல் நீளத்திற்குக் கரையை யுயர்த்தி, வெள்ளத்தினால் நாட்டிற்குக் கேடு உண்டாவதைத் தடுத்தான்; பல கால்வாய்களையும் வெட்டுவித்து நீர்ப்பாசன வசதிகளை யளித்தான்.

இவன் காலத்தில் காவிரியின் முகத்துவாரத்திலுள்ள காவிரிப்பூம்பட்டினம் ஒரு துறைமுகமா யிருந்ததாகத் தமிழ் நூல்களினின்றும் அறிகிறோம்.

பராந்தகன்:—கி. பி. 10-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அடங்கிக் கிடந்த சோழ அதிகாரம் **பராந்தகன்** என்ற சோழனால் மீண்டும் தலைதூக்கலாயிற்று. இவன் காலத்தில் கிராம, நகரபரிபாலன சபைகள் ஏற்பட்டன. மாந்தர் சுகமாக வாழ்ந்தனர்.

கீர்த்திபெற்ற இராஜராஜ சோழன் (கி.பி. 985-1013):—பராந்தகனுக்குப் பின்ஆண்ட முக்கிய அரசன் **இராஜராஜசோழன்.** இவன் ஒரு பெரிய வெற்றி வீரன். இவன் பாண்டியர்களையும் சேரர்களையும் ஜெயித்தான்; இலங்கையையும் வென்றான். இவன் கிழக்குச் சாளுக்கியர்களை யடக்கி ஒரு சாளுக்கிய இளவரசனுக்குத் தன் மகளை மணம் புரிவித்துச் சாளுக்கிய நாட்டைச் சோழ ராஜ்யத்தின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தான்.

இராஜராஜன் கலைகளின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவன். இவன் சைவமதத்தில் மிகப் பற்றுள்ளவன். **நம்பியாண்டார் நம்பி** என்பவரின் உதவியைக் கொண்டு அழிந்துபோகும் நிலைமையிலிருந்த **தேவாரம், திருவாசகம்** ஆகிய நூல்களைத் திரட்டி, அவற்றைச் செப்புத் தகடு

களில் எழுதிவைத்தான். தனது தலைநகரான **தஞ்சாவூரில்** தன் புகழ் என்றும் விளங்கும்படி ஓர் அழகிய ஆலயத்தை யமைத்தான். இதற்குப் **பிரஹதீசுவரர் ஆலயம்** எனப் பெயர். இக்கோயிலில் கல்லாற் செய்யப்பட்ட ஒரு பெரிய நந்தி இருக்கிறது. இக்கோயிலின் கோபுரம் மிக உயரமும் அழகும் வாய்ந்தது. இதன் நிழல் பூமி



பிரஹதீஸ்வரர் ஆலயம்

யில் சாய்வதில்லை. ஆகையால் இதன் சிற்ப வேலையைப் புகழாதாரில்லை. இவ்வரசனே சிதம்பரத்திலுள்ள நடராஜர் ஆலயத்தின் பொன்னம்பலத்திற்குப் பொற்றகடு வேய்ந்தவன்.

இராஜேந்திர சோழன்:—கி. பி. 1013-ல் இராஜராஜனின் மகனான இராஜேந்திர சோழன் அரசனானான். தகப்பனைப்

போலவே இவனும் பலம் பொருந்திய ஒரு வீரன். இவனும் இலங்கை நாட்டை வென்றான்; சேர, பாண்டியர்களை யடக்கினான்; வடக்கே கங்கை நதி வரை சென்று வங்காளத்திலிருந்த பல ஆரிய அரசர்களை வென்று, **கங்கைகொண்ட சோழன்** என்ற பட்டம் சூட்டிக்கொண்டான். இவ்வெற்றியின் ஞாபகார்த்தமாகத் திருச்சி ஜில்லாவில் **கங்கைகொண்ட**



கங்கைகொண்ட சோழபுரம் கோயில்

சோழபுரம் என்ற ஒரு நேர்த்தியான நகரை யுண்டாக்கினான். அதில் தஞ்சாவூர்க் கோயிலைப்போன்ற ஒரு கோயிலைக் கட்டினான்.

இவன் கடற்படையைக் கொண்டு கீழ்பர்மாவை ஜெயித்தான். **மர்டபன், அண்டமான், நிக்கோபார்** ஆகிய தீவுகளையும் வென்றான். இவ்வாறு கீர்த்தியுடன் ஆண்ட இராஜேந்திர சோழன் கி. பி. 1035-ல் இறந்தான்.

முதல் குலோத்துங்கன் (கி. பி. 1070-1118):-இராஜேந்திர சோழன் தன் குமாரியைக் கிழக்கு சாளுக்கியவம்சத்தைச் சேர்ந்தவனும், இராஜராஜ சோழனுடைய மகள் வயிற்றில் பிறந்தவனுமான **இராஜராஜ நரேந்திரன்** என்பவனுக்கு மணம் செய்திருந்தான். அவர்களுக்கு **இராஜேந்திரன்** என்ற ஒரு குமாரன் பிறந்தான். இவனே **குலோத்துங்க சோழன்** என்ற பட்டப் பெயருடன் கி. பி. 1070-ல் சோழ இராஜ்யத்திற்கு அதிபதியானான். இவன் சோழ வம்சத்தை மீண்டும் நிலைநிறுத்தினான். ஆதலால் குலோத்துங்கன் என்ற பட்டம் இவனுக்கு ஏற்பட்டது. இவனுக்குப் பிறகு, இரண்டு குலோத்துங்க சோழர்கள் ஆண்டமையால் இவனை **முதலாவது குலோத்துங்க சோழன்** என்பர்.

இவன் காலத்தில் கலிங்க தேசம் சோழநாட்டுக்குக் கப்பம் கட்டும் நாடாக இருந்தது. ஆனால் அப்பொழுது கலிங்கநாட்டுக்கு அரசனாக வந்த **அநந்தபதுமன்** என்பவன் சோழர்களுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டான். அதை அறிந்த குலோத்துங்கன், **கருணாகரத் தொண்டைமான்** என்ற சேனாதிபதியையும், தன் மகன் **விக்ரம சோழன்** என்பவனையும் ஒரு பெரிய சேனையுடன் அனுப்பிக் கலிங்கத்தை வென்றான். குலோத்துங்கனுடைய இந்த சிறந்த வெற்றியைக் குறித்து, **ஜெயங்கொண்டார்** என்ற தமிழ்ப் புலவர் **கலிங்கத்துப்பரணி** என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். **ஔவையார், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர்** முதலியோர் இவன் காலத்தில் இருந்தார்கள். இவ்வரசன் கேட்டுக் கொண்டதற்கு இசைந்து **சேக்கிழார் சுவாமிகள்** அறுபத்துமூன்றுநாயன்மார்களான சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறுவதாகிய **பெரிய புராணத்தைத்** தமிழில் எழுதினார். இக்காலத்தில் வைணவ ஆசாரியராகிய **இராமாநுஜாசாரியார்** இருந்தார்.

முதல் குலோத்துங்க சோழன் நிலவரிகளை நிர்ணயிப்பதற்காகக் கி. பி. 1086-ல் நிலங்களை அளந்து வகுத்து, வரிகளை நியதி செய்தான்; குலோத்துங்கன், சுங்கவரியை நீக்கி வியாபாரத்திற்குச் சகாயம் செய்தான். இதனுல் இவனுக்குச் **சுங்கம் தவிர்த்த சோழன்** என்ற பெயர் ஏற்பட்டது. இவன் பல கோயில்களைக் கட்டினுன்; வித்துவான்களை ஆதரித்தான்.

இவன் இறந்த பிறகு, இவன் குமாரனுன **விக்கிரம சோழன்** அரசுபுரிந்தான்.

காலக்கிரமத்தில் சோழ அரசர்களின் வலிமை குறைந்து, அவர்களுடைய இராஜ்யம் சிதைந்து கி. பி. 14-ம் நூற்ருண்டில் முஸ்லீம்களின் வசம் ஆயிற்று.

கேள்விகள்

1. சோழ அரசர்களில் கீர்த்திபெற்ற இரண்டு மன்னர்களின் பெயர்களைக் கூறுக.
2. இராஜராஜ சோழன் கீர்த்திக்கு மூன்று காரணங்கள் கூறுக.
3. கங்கைகொண்ட சோழன் என்ற பெயர் யாருக்கு எப்படி வந்தது?
4. எவ்வாறு கிழக்குச் சாளுக்கிய வம்சம் சோழர்களுடன் ஒன்றுபட்டது?

---

28. சேர ராஜ்யம்

சேர ராஜ்யத்தைக் கேரள இராஜ்யமென்றும் சொல்வதுண்டு. கொச்சி, மலையாளம், கோயம்புத்தூர், திருவாங்கூர் முதலியன சேர்ந்த நாட்டைப் பழைய சேர ராஜ்யம் என்று சொல்லலாம்.

செங்குட்டுவன்:—சேர அரசர்களிற் சிறந்தவன் செங்குட்டுவன். இவன் தாய் வழியில் சோழ அரசரின் மரபைச்

சேர்ந்தவன். இவன் சோழர்களையும் **பாண்டியர்களையும்** வென்றான்; ஆந்திரர்களையும் ஜெயித்தான்; கங்கைநதி வரைசென்று அங்கு வசித்த ஆரியர்களையும் அடக்கினான்.

கோவலன் மனைவி கண்ணகி தன் நாட்டில் வந்து உயிர் துறந்து சொர்க்கம் சென்றதைக் கேட்டு அவளுக்கு ஒரு கோவில் கட்ட எண்ணினான். உருவச் சிலைக்குரிய கல்லை இமயமலையில் எடுத்துத் தனது தலைநகரமாகிய வஞ்சியில் கோயில் கட்டி, அதில் கண்ணகியின் உருவத்தைப் பிரதிஷ்டை செய்தான். இந்த அரசனின் சகோதரர் **இளங்கோவடிகள்** என்ற பெரியார். இவரே கோவலன் வரலாற்றைக் கூறும் **சிலப்பதிகாரம்** என்ற சிறந்த நூலை எழுதியவர்.

செங்குட்டுவனுக்குப் பிறகு, அடுத்தபடியாகக் கீர்த்தியுடன் ஆண்டவன் **வீரகோளரி வர்மன்.**

சேர ராஜ்யம் அக்காலத்திலேயே மேல்நாடுகளுடன் வாணிபம் நடத்தியது. **முசிறி, மாந்தை** முதலிய துறைமுகங்களினின்றும் மிளகு, வாசனைத் திரவியங்கள், தந்தம் முதலிய சாமான்கள் அரேபியா, கிரீஸ் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. சேர நாட்டின் தலைநகரான **வஞ்சி** கீர்த்திபெற்று விளங்கியது.

கேள்விகள்

1. செங்குட்டுவனைப்பற்றி ஒரு குறிப்பு வரைக.
2. சிலப்பதிகாரம் யாரால் எழுதப்பட்டது?
3. சேர இராஜ்யத்தினின்றும் என்னென்ன சாமான்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டன?

---

29. பாண்டிய ராஜ்யம்

தற்காலத்திலுள்ள மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களும், திருவாங்கூர் நாட்டின் தென் பகுதியும், புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஒரு பாகமும் சேர்ந்து பழைய பாண்டிய ராஜ்யமாகும். கொற்கையும், மதுரையும் ஒவ்வோர் காலத்தில் பாண்டிய நாட்டின் தலைநகரமாக இருந்தன.

தொன்றுதொட்டுப் பாண்டிய ராஜ்யம் தமிழ்க் கலை வளர்ச்சிக்கு முக்கிய இடமாயிருந்தது. **தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்** என்ற மூன்று சங்கங்கள் பாண்டிய நாட்டுத் தலைநகரான மதுரையில் கூடின. இச்சங்கப் புலவர்கள் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்டனர். **திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை** முதலிய உயர்ந்த தமிழ் நூல்கள் இச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்டன. இந்நூல்கள் தமிழர்களின் நாகரிக நிலையை விவரிக்கின்றன.

கி. பி. 7-வது நூற்றாண்டில் **நெடுஞ்செழியன்** என்ற பாண்டிய மன்னன் பெருமையுடன் விளங்கினான். இவன் சிறந்த குணசாலி; நீதிமான். இவன் **தலையாலங்கானம்** என்னும் இடத்தில் சேரனையும், சோழனையும், சிற்றரசர்களையும் எதிர்த்துத் தோற்கடித்தான்.

அதே நூற்றாண்டில் **கூன்பாண்டியன்** அரசுபுரிந்தான். இக் கூன்பாண்டியன் ஜைனமதப் பற்றுள்ளவனாய் இருந்தான். ஒரு தடவை இவனுக்கு விஷசுரம் கண்டது. இவனுடைய மந்திரி சிவபக்தி உடையவன். **குலச்சிறையார்** என்பது இவனுடைய பெயர். பாண்டியனது மனைவியாகிய மங்கையர்க்கரசியும் சிவபக்தி நிறைந்தவள். இருவரும் சேர்ந்து, அரசனைச் சிவபக்தி உடையவனாக மாற்றுவது எவ்வாறு

என ஆலோசித்து, திருஞான சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்து, அவர் மூலம் விஷசுரத்தை யகற்றிக் கூன் பாண்டியனைச் சைவ மதத்தினனாக ஆக்கினார்கள். பின்னும் இப்பெரியாரின் அனுக்கிரகத்தினாலேயே கூன்பாண்டியன் தன் கூனல் நிமிர்ந்து அழகுபெற்ற புருஷனாகிச் **சுந்தரபாண்டியன்** என்ற பெயரை யடைந்தான்.

இவனுக்குப் பிறகு பாண்டிய வம்சம் சீர்குலைய ஆரம்பித்தது. சோழ நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் பல போர்கள் நடந்து ராஜ்யம் சிதைவுற்றது. கடைசியாய்ப் பாண்டிய ராஜ்யம் சோழ ஆட்சிக்கு உட்பட்டது.

நாட்டுச் சிறப்பு:—பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் நேர்த்தியான மீனாட்சியம்மன் கோயில் காணப்படுகிறது. இக்கோயில் பாண்டிய அரசர்களால் கட்டப்பட்டது. பாண்டியர்களின் தேசீயக்கொடி மீன்கொடி ஆகும். இதிலிருந்து அவர்கள் கப்பற்படையை வைத்திருந்தார்களென்று தெரிகிறது. அவர்களின் துறைமுகமான **கொற்கை** என்னும் நகருக்கருகில் முத்துக்குளிக்கப்பட்டதென்றும், முத்து, பவளம், தந்தம், மயில்தோகை முதலிய சாமான்கள் அங்கிருந்து மேல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டனவென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

கேள்விகள்

1. பாண்டிய ராஜ்யத்தின் பரப்பை விவரிக்க.
2. கூன்பாண்டியனைச் சுந்தரபாண்டியன் என்பானேன் ?
3. சங்க நூல்களில் இரண்டை யெழுதுக.
4. பாண்டிய நாட்டின் துறைமுகம் யாது ?

30. மதாசாரியர்கள்

இந்துமதம் க்ஷீணித்தல்:- ஆதியில் இந்தியாவில் இந்துமதம் ஒன்றே பரவியிருந்தது. பிறகு நாளடைவில் ஜனங்களிடையே ஜாதிவேற்றுமை, பலியிடுதல் முதலிய காரணங்களால் மனவேறுபாடு உண்டாயிற்று. மதக்கொள்கைகளிலும் அபிப்பிராய வித்தியாசங்கள் தோன்றலாயின. கி. மு. ஆரும் நூற்ருண்டில் மகாவீரர், புத்தர் என்ற இரு மகாபுருஷர்கள் தோன்றி முறையே ஜைன, பௌத்த மதங்களை ஸ்தாபித்தார்கள். அக்காலத்திய அரசர்களும் இப்புதிய மதங்களைப் போற்றித் தழுவ ஆரம்பித்ததால், இந்துமதம் படிப்படியாக க்ஷீணிக்கத் தொடங்கிற்று.

இந்துமதம் மீண்டும் ஓங்குதல்:— பின்னர் கி.பி. எட்டாவது நூற்ருண்டிலிருந்து இந்துமதம் மீண்டும் தலையெடுக்க ஆரம்பித்தது. ஜைன, பௌத்த மதங்கள் க்ஷீணிக்கத் தொடங்கின. எங்ஙனமெனில் மதாசாரியர்கள் பலர் தோன்றி இந்துமதக் கொள்கைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்தும், அக்கொள்கைகளைப் பாமர மக்களும் விரும்பும்படிப் பிரசாரங்கள் செய்தும் இந்துமதத்தை மீண்டும் தழைத்து நிலைக்கச் செய்தார்கள். இவர்களுள், சங்கராசாரியார், இராமானுஜாசாரியார், மத்வாசாரியார் என்னும் மூவரும் முக்கியமானவர்கள். இப்பெரியார்களின் காலம் கி. பி. 8-வது நூற்ருண்டிலிருந்து 13-வது நூற்ருண்டு வரையில் ஆகும்.

சங்கராசாரியார்:— இவர் மலையாள நாட்டில் **காலடி** என்னும் ஊரில் பிறந்தார். இவர் நம்பூத்திரி என்ற பிராமண வம்சத்தைச் சேர்ந்தவர். இவர் இளமைப் பருவத்திலேயே ஸம்ஸ்கிருத பாஷையைப் பயின்று ஞானம் பெற்று, வேதாந்த நூல்களைச் சந்தேகமின்றிக் கற்றுத் துறவியானர். பிறகு இந்தியா முழுவதும் சஞ்சாரம் செய்து,

ஆங்காங்கே இருந்த ஜைனர்களையும், பௌத்தர்களையும் வாதத்தில் வென்றார்.

இவர் ஸம்ஸ்கிருதத்தில் பல நூல்களையும், **பிரம்மசூத்ரம்,** **பகவத்கீதை** முதலிய நூல்களுக்கு உரைகளையும் எழுதி யிருக்கிறார். இவர் **அத்வைத** மதக்கொள்கைகளைப் பரவச் செய்தார். இது இந்துமதத்தின் ஒரு பிரிவு.

ஸ்ரீ சங்கராச்சாரியார்

காசி, பூரி, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் இவர் ஒவ்வொரு மடத்தை ஸ்தாபித்தார். அவ்விடங்களில் தம் சீடர்களை மடாதிபதிகளாக்கி, அவர்களை ஆங்காங்கே அத்வைத மதத்தைப் பிரசாரம் செய்யுமாறு செய்தார். பிறகு இவர் துங்கபத்திரா நதிக்கரையில் **சிருங்ககிரி** என்னும் இடத்தில் ஒரு மடத்தை ஸ்தாபித்து அங்கேயே சித்தியடைந்தார்.

இராமானுஜாசாரியார்:—இவர் சென்னைக்கு அருகிலுள்ள **ஸ்ரீ பெரும்புதூர்** என்ற ஊரில் பிராமண வம்சத்தில் பிறந்தவர். இவர் முதலில் காஞ்சீபுரத்திலிருந்த **யாதவப்பிரகாசர்** என்பவரிடம் ஸம்ஸ்கிருத கல்வி பயின்றார். பிறகு அதே ஊரிலிருந்த **பெரியநம்பி** என்பவரிடம் வேதங்களைக் கற்றார்.



ஸ்ரீ இராமானுஜாசாரியார்

இவர் இல்லறத்தை விட்டொழித்துத் துறவு பூண்டு **ஸ்ரீரங்கம்** என்னும் ஸ்தலத்தை யடைந்து, அங்கே வாசம் செய்யலானார். பிறகு **திருக்கோட்டியூர் நம்பி** என்பவரைக் குருவாகக்கொண்டு அவரிடம் மந்திரோபதேசம் பெற்றார். அப்போது அம்மந்திரத்தை எவருக்கும் வெளியிடக் கூடாது என்று அக்குரு கட்டளையிட்டார். ஆயினும்

இராமாநுஜர் அக்கட்டளையை மீறித் திருக்கோட்டியூர் கோயில் கோபுரத்தின் மீது ஏறி நின்று, திருவிழாக் காலத்தில் அங்கு வந்திருந்த எல்லாருக்கும் அம்மந்திரத்தை உபதேசித்தார். அதுகண்ட குரு கோபித்துக், "குரு வார்த்தையை மீறினதால், நரகமே உமக்குக் கிடைக்கும்" என்று கூறினர். அதற்கு இராமாநுஜர், "நான் ஒருவன் நரகம் அடைந்தாலும் இம்மந்திரோபதேசத்தால் எல்லோரும் மோக்ஷம் அடைவார்கள் அல்லவா?" என்றூர். குரு இவருடைய பரோபகாரசிந்தையை மெச்சி இவரை வாழ்த்தினர்.

பிறகு இராமாநுஜர் இந்தியாவிலுள்ள முக்கியமான ஸ்தலங்களுக்குச் சென்றூர். இவர் **விசிஷ்டாத்வைத** மதத்தைப் போதித்தார். இதுவும் இந்துமதத்தின் ஒரு பிரிவேயாகும். இவருடைய கொள்கைகளைத் தழுவியவர்களுக்கு **வைஷ்ணவர்கள்** என்று பெயர். ஸம்ஸ்கிருத பாஷையில் சில நூல்களையும், பகவத்கீதை முதலிய நூல்களுக்கு உரைகளையும் இவர் எழுதினர். வைஷ்ணவர்கள் இவரை **யதிராஜர்**, **பாஷ்யகாரர்** முதலிய பெயர்களால் அழைப்பார்கள். இவர் பல மடங்களையும் ஸ்தாபித்தார். அவைகளுள் **அஹோபில மடமும்** ஒன்றூகும்.

இவர் ஜாதிபேதமின்றி எல்லோருடனும் கலந்து கடவுளை வழிபட்டு முடிவில் முக்தியடைந்தார்.

மத்வாசாரியார்:—இவர் தென் கன்னடம் ஜில்லாவிலுள்ள **உடுப்பி** என்னும் ஊரில் பிராமணர் குலத்தில் பிறந்தார். இவர் சாஸ்திரப்பயிற்சியில் தேர்ச்சிபெற்று சந்நியாசம் பெற்றூர். இவரும் சம்ஸ்கிருதத்தில் பலநூல்களையும், **பிரம்மசூத்ரம், பகவத்கீதை** ஆகிய நூல்களுக்கு உரைகளையும் எழுதியுள்ளார். பல ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தும், மதவாதங்கள் செய்தும் இந்துமதத்தின் கொள்கைகளை இவர் நிலைநாட்டினர்.

இவர் போதித்த மதத்திற்குத் **த்வைதம்** என்றுபெயர். இதுவும் இந்துமதத்தின் ஒரு பிரிவேயாகும். இம்மதத்தை அனுசரிப்பவர்களும் வைஷ்ணவர்களே யாவர். இவர் உடுப்பியில் பல மடங்களை ஸ்தாபித்தார்.



ஸ்ரீ மத்வாசாரியார்

நாயன்மார்களும், ஆழ்வார்களும்:—ஜைன, பௌத்த மதக் கொள்கைகளைக் கண்டித்துச் சைவ வைஷ்ணவக் கொள்கைகளை நிலைநாட்ட வேறு பல அடியார்களும் நம் நாட்டில் தோன்றினர்கள். இவர்களுள் சைவ மதத்தை நிலைநாட்டி அக்கொள்கைகளைப் பரப்பியவர்கள் **நாயன் மார்கள்** எனப்படுவார்கள். வைஷ்ணவமதத்தை நிலைநாட்டி அக்கொள்கைகளைப் பரப்பியவர்கள் **ஆழ்வார்கள்** எனப்படு வார்கள்.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் நாயன்மார்களுள் முக்கியமானவர்கள். அவர்கள் அருளிச்செய்த **தேவாரமும், திருவாசகமும்** சைவர்களின் முக்கியமான நூல்கள்.

நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் முதலியவர்கள் ஆழ்வார்களுள் முக்கியமானவர்கள். ஆழ்வார்கள் மகாவிஷ்ணுவைக் குறித்துத் தமிழில் பல ஸ்தோத்திரப் பாடல்கள் இயற்றியுள்ளார்கள். இப்பாடல்களின்தொகுதி **நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்** எனப்படும். இது வைஷ்ணவர்களுக்கு முக்கியமான நூல்.

கேள்விகள்

1. இந்துமதம் எப்போது க்ஷீணிக்க ஆரம்பித்தது? ஏன்?
2. மறுபடியும் இந்துமதத்தைத் தழைக்கச்செய்தவர்கள் யார்?
3. மதாசாரியர்கள் மூவரின் பெயர்களைக் கூறு.
4. நாயன்மார்களில் முக்கியமானவர்களைக் கூறு.
5. ஆழ்வார்களில் முக்கியமானவர்களைக் கூறு.

———

THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.